பக்கங்கள் : பன்னிரண்டு+II

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 06 திங்கட்கிழமை (22.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 299

# அக்கராயனில் உக்கிரச் சமர்! இரு தரப்பும் பீரங்கிச் சண்டை!!

## இரவுவரை பல இடங்களில் கடும் மோதல்கள்

கிளிநொச்சி, செப்ரெம்பர் 22

வன்னியில், கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் பகுதியில் - முறிகண்டிக்கு மேற்கே-அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுக்காலை கடுஞ்சமர் வெடித்தது.

ஆட்லறிப் பீரங்கிகள் மற்றும் கனரக ஆயுதங்கள் கொண்டு அப்பகுதியில் இரு தரப்பினரும் உக்கிரமாக மோதிக்கொண்டனர் என்று களமுனைத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று நள்ளிரவு கிடைத்த தகவல்களின் படி, கிளிநொச்சி மாவட்டத்தின் பல இடங்களிலும் கடும் மோதல்கள் நடைபெற்றதாகவும், அவை தொடர்வதாகவும் அறிவிக்கப்பட்டது. (12ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவின் அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு, செப். 22

மட்டக்களப்பு பெரிய கல்லாறு பகுதியில் (தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி) அலுவலகம் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் இனந்தெரியாதவர்களின் கைக்குண்டுத் தாக்குதலுக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

## கரம்பன் குளம் பகுதியிலும் மோதல்

கொழும்பு, செப்.22

கிளிநொச்சியில் கரம்பன்குளம் பகுதியிலும் நேற்று படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது கடும் மோதல் வெடித்தது என்று படைத்தரப்பினால் அறிவிக்கப்பட்டது.

நேற்று நண்பகல் 12 மணி தொடக்கம் 2 மணி வரை அந்தப் பகுதியில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் விடுதலைப் புலிகளின் ஆறு பதுங்கு குழிகளை அழித்ததுடன் மூன்று ரி 56 துப்பாக்கிகள், 32 கிரனேட்டுக்கள், 15 ஆயிரம் ரவைகள் ஆகியவற்றை படையி (12ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே →
க.பொ.த.ப (சாதாரண தர) பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாள்
வரலாறு (I+II)

## ஜனாதிபதி - எரிக்சொல்ஹெய்ம் இன்று நியூயோர்க்கில் சந்திப்பு

கொழும்பு, செப்.22

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத் தொடருக்கு நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மை இன்று சந்திப்பார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான உடன்படிக்கையிலிருந்து விலகி இராணுவ நடவடிக்கைகளை அரசு தீவிரப்படுத்தியுள்ள சூழ்நிலையில் இந்தச் சந்திப்பு நிகழ்கின்றது.

எனினும், இது வழமையான சந்திப்பு (12ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீகோணேஸ்வரம் பிரதம குருக்கள் ஆயுததாரிகளால் சுட்டுக் கொலை

திருகோணமலை, செப்.22

திருக்கோணேஸ்வரத்தின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ சிவகுகராஜக்குருக்கள் (வயது 50) நேற்று மாலை, வித்தியாலய வீதியில் உள்ள சண்முக இல்லத்துக்கு அருகாமையில் வைத்து மோட்டார் (12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குத் தமிழர்களின் விவரங்கள் நேற்றுக் கொழும்பில் பதியப்பட்டன

கொழும்பு, செப்.22

வடமாகாணத்திலிருந்து வந்து கொழும்பு மற்றும் மேல் மாகாணத்தில் தங்கியிருப்போரை பதிவு செய்யுமாறு பொலிஸார் விடுத்த உத்தரவுக்கமைய நேற்று பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் தம்மைப் பதிவு செய்து கொண்டனர். சரித்திரத்தில்முதல் தடவையாக கொழும்பில் ஒரே வேளையில் மாபெரும் தமிழர் பதிவு நடைபெற்று முடிந்தது.

காலை 8 மணி முதல் பொலிஸாரிடம் தம்மைப் பதிவு செய்வதற்காக அதற்கென ஒதுக்கப்பட்டிருந்த பாடசாலைகள், கோவில்கள் மற்றும் ஏனைய பொதுக் கட்டடங்களின் முன்பாகப் பெருமளவு மக்கள் திரண்டிருந்தனர். ஒவ்வொருவரினதும் விவரங் கள் தனித்தனியாகப் பதியப்பட்டன. ஏன், எதற்காக, எப்போது கொழும்புக்கு வந்தீர்கள்



## கொழும்புத் துறைமுகத்தில் பீரங்கிச் சத்தங்கள்

கொழும்பு, செப். 22

கொழும்பு துறைமுகத்தை அண்டிய கடற்பரப்பில் நேற்றுக்காலை சிறிதுநேரம் குண்டுச்சத்தங்கள் கேட்டன.

காலை 8 மணிதொடக்கம் 8.30 வரை சுமார் 30 நிமிடங்கள் தொடர்ச்சியாகக் கேட்ட இந்தப் பீரங்கிக் குண்டுச் சத்தங்களால் துறைமுகத்தை அண்டிய கரையோரப் பகுதிகளில் சிறுது நேரம் பதற்றம் (12ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியிலுள்ள ஐ.நா.அலுவலகங்களில் திருட்டு

கொழும்பு, செப்.22

கிளிநொச்சியிலுள்ள தமது அலுவலகங்களில் இடம்பெற்ற சிறு திருட்டுச் சம்பவங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் இரவு இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று அறிக்கையொன்றில் ஐக்கிய நாடுகள்சபை தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட சம்பவங்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## குறித்த ஒரு பகுதி மக்களைப் பிரித்துப் பார்ப்பது அநியாயம்
## அடாவடித்தனமாக ஆட்சி நடத்தும் எந்த அரசும் நிலைத்து நின்றதில்லை
### பொலீஸ் பதிவு முறையால் மேலக மக்கள் முன்னணி சீற்றம்

கொழும்பு, செப். 22

ஐந்து வருடங்களுக்குள் கொழும்புக்கு வந்த தமிழர்களை மட்டும், விசேட பொலிஸ் பதிவுக்கு ஆளாக்கியிருக்கின்றமை இலங்கையின் அரசமைப்புக்கு முரணானதாகும். இத்தகைய அடாவடித்தனமான ஆட்சியை நடத்தும் எந்த அரசுகளும் நிலைத்து நின்றதாக சரித்திரமே கிடையாது.

- இவ்வாறு சீற்றத்துடன் கருத்து வெளியிட்டிருக்கிறார் மேல்மாகாணசபை உறுப்பினரும், மேலக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளருமான பிரபா கணேசன்.

நேற்றுக் கொழும்பில் பொலிஸ் (12ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்க காலமானர்

கொழும்பு, செப். 22

முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க நேற்றுக் காலை 9.30 மணிக்கு கண்டியில் காலமானார்.

நீண்ட நாள்களாக சுகவீனமுற்றிருந்த அவர் கண்டி வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். அங்கு அவர் நேற்றுக் காலமானார்.

இறக்கும்போது அவருக்கு வயது 86 ஆகும். 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை (12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 நாள்களாக கடலில் தத்தளித்த மீனவர் நேற்றுக் காப்பாற்றப்பட்டார்

மந்திகை, செப்.22

கட்டுமரத்தில் மீன்பிடிக்கச் சென்று மூன்று நாள்களாக நடுக்கடலில் தத்தளித்த மீனவர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக் கிழமை கடலுக்குச் சென்ற மீனவர்களால் காப்பாற்றப்பட்டு கரைசேர்க்கப்பட்டார்.

பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்த சூசைப்பிள்ளை யேசுதாசன் (வயது 46) என்பவரே கட்டு மரத்தில் மீன் பிடிக்கச் சென்று கடுங்காற்று, அலைகள் காரணமாக நடுக்கடலில் தத்தளித்தவர் ஆவார்.

கடந்த வெள்ளிக்கிழமை மீன்பிடிக்கச் சென்ற அவர் சனிக்கிழமை கடலில் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்படாத காரணத்தால் எவராலும் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கடலில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டதை அடுத்து முனைப்பகுதி மீனவர்கள் இவரை மீட்டுக் கரைசேர்ந்தனர். (அ-218)

## பயனாளிகள் தேர்வு

மந்திகை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் காலபோக நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்கப்பட உள்ளது. இதற்கென எட்டு கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து 319 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக புலோலி கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். உருத்திரேஸ்வரன் தெரிவித்தார். (1-207)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



மானிப்பாய், கட்டுடையைச் சேர்ந்த
திரு. திருமதி ஜெயக்குமார் - மஞ்சுளாதேவி
தம்பதியினரின்

**செல்வப் புதல்வி ஜெயதீபிகா**

இன்று (22.09.2008) திங்கட்கிழமை தமது முதலாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, மாமன்மார், பூட்டி ஆகியோர் சீரணி நாகம்மாளின் அருள்பெற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

கட்டுடை,
மானிப்பாய். (78652) B.தினேஸ் (மாமா).

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் கல்விகற்று தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 176 புள்ளிகளைப் பெற்றுத் தமிழ் மொழிமூல மாணவர்களில் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்ற

**செல்வன்**
**தர்மலிங்கம் பாசுபதன்**

அவர்களை விநாயகன் அருள்பெற்று, உயர்கல்வி கற்று, உயர்வுபெற்று, நோய்நொடியின்றி சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தம்பிமார், அம்மம்மா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், சித்திமார், சித்தப்பாமார், ஆசையம்மா, ஆசையப்பா, பெரியம்மா, பெரியப்பா, அன்ரிமார், மச்சாள்மார், மச்சான்மார், அண்ணாமார், அக்காமார், அத்தான்மார்.

கண்டி வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை. (78654)

## தேவை

நல்ல அனுபவமுள்ள உள்ளாடை (Bra) தைப்பதற்கு பெண் பிள்ளைகள் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு கொள்ளவும்.
56/14, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்,
T.T கொம்பியூட்டர் லேன்.
T.P - 0774211551

## பதவி வெற்றிடம்

யாழ். நகரப் பகுதியிலும், கோண்டாவி லிலும் இயங்கும் நிறுவனத்தில் ஆளணி வெற்றிடம் உண்டு.
1) கணனி சரீர் வேலைகள் தெரிந்தவர் கள்.
2) வியாபாரத்தில் ஆர்வமும், திறமையும் உள்ளவர்கள்.
25.09.2008 இற்கு முன் நேரில் வரவும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: அஸ்விணி மல்ரி பிளாசா,
74, ராஜா பிளாசா, பலாலி வீதி, கோண்டாவில்.

## ஸ்கந்தாவின் அஞ்சலி

எமது கல்லூரியின் நடன ஆசிரியை
திருமதி சித்திரா இராஜமனோகரன் அவர்களின்
பாசமிகு தந்தை

**அமரர் வெ.கந்தையா**

அவர்கள் காலமான செய்தியறிந்து ஸ்கந்தா சமூகம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றது.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

## கண்டெடுக்கப்பட்ட கைச்சங்கிலி

பிரதான வீதி, சங்கானை, கூடத்து அம்மன் கோயிலுக்கு அருகாமையில் ஒரு கைச்சங்கிலி என்னால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன் உரிமையாளர்கள் நம்பத் தகுந்த ஆதாரங்களுடன் வந்து அதனைப் பெற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:- க.மாயாகரன்
வெற்றிலைக்கடை
சந்தை, சங்கானை.

## துயர் பகிர்கிறோம்



கோப்பாய் பிரதேச செயலர்
திரு. C.A.மோகன்ராஸ் அவர்களின்
அன்புத் தாய்

**திருமதி கிறிஸ்தோபர் ஆனந்தம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விவசாயத் திணைக்களம் (விரிவாக்கம்),
யாழ்ப்பாணம். (78656)

## கண்ணீர் அஞ்சலி



**ஆனந்தம் கிறிஸ்தோபர்**

எமது வலி. கிழக்கு பிரதேசச் செயலகத்தின் பிரதேசச் செயலர் திரு. C.A.மோகன்ராஸ் அவர்களின் அன்புத்தாயார் ஆனந்தம் கிறிஸ்தோபர் அவர்கள் 20.09.2008 சனிக்கிழமை காலை இறைபதமடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு, அவரது ஆத்ம இளைப்பாறுதலுக்காக இறைவனை வேண்டுகிறோம்.

நலன்புரிச் சங்கள்,
பிரதேசச் செயலகம்,
வலி. கிழக்கு.
கோப்பாய். (78632)

## விற்பனைக்கு

டாஸ் - இன நாய்க்குட்டிகள்
விற்பனைக்குண்டு.
**S.தனபாலசிங்கம்**
**இருபாலை. 0775353501**

## தவறிவிட்டது

மாவிட்டபுரம், தெல்லிப்பழை என்னும் முகவரியுடைய கௌசல்யா செல்வரத்தினம் என்பவரது தே.அ.அட்டை (887863954V), 680, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்னும் முகவரியுடைய விசேட அடையாள அட்டை, பாடசாலை அடையாள அட்டை என்பன கைப்பையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவியுடன் தொடர்பு கொள்ளவும்.

கு.பிரதீப்குமார்,
வளவத்தை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

## கோழிக் குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர்குஞ்சுகள் 22.09.2008 மாலை விநியோகிக்கப்படும்.

★ ராஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
★ திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப் புளியடி
★ சிற்றி பாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு
★ மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
★ P.ரவி - சாவகச்சேரி

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சோமசுந்தரம் சரஸ்வதி

சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் சரஸ்வதி நேற்று (21.09.2008) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரவணை கிழக்கு,
வேலணை.
தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தெய்வேந்திரம்மாள் தாமோதரம்பிள்ளை

புன்னாலைக் கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது திருகோணமலையில் வசித்து வந்தவருமாகிய திருமதி தெய்வேந்திரம்மாள் தாமோதரம்பிள்ளை நேற்று முன்தினம் (20.09.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவநாதர் - விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியத்தின் (உதவிக் கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வியமைச்சு, வடமாகாணம்) அன்புத் தாயும், கமலினியின் (ஆசிரியை, திருகோணமலை சவேரியன் மகாவித்தியாலயம்) பாசமிகு மாமியாரும், கஜானன் (A/L 2010 உயிரியல் பிரிவு, திருகோணமலை கோணேஸ்வராக் கல்லூரி), கஜினினி (A/L 2010 உயிரியல் பிரிவு, திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி), சஞ்சிகா (தரம் 10, திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (21.09.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.3, சாரதா வீதி,
திருகோணமலை.
தொ.பே.இல. 0602260777, 0777077200 (78657)

தகவல்:
மகன் தா.பாலசுப்பிரமணியம்
(உதவிக் கல்விப் பணிப்பாளர் மாகாண கல்வியமைச்சு, வடமாகாணம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கடலேரியில் மீன்பிடிக்க இருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன

## கடற்றொழிலாளர்களின் இணையம் தகவல்

குருநகர்,செப்.22

குடாக் கடலில் குருநகர் இறங்குதுறைக்கு கிழக்குப்புறக் கடலில் தொழில் செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளில் சில தளர்த்தப்பட்டுள்ளன.

வாரத்தில் இரு தினங்கள் மட்டும் படையினர் விதித்துள்ள கடல் எல்லைக்கு அப்பால் சென்று தொழில் செய்யவும்-

தமது வள்ளங்களில் பாயின் உதவியுடன் சென்று தொழில் செய்யவும் படைத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளது என குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை கடற்றொழிலாளர்களின் இணையம் தெரிவித்துள்ளது.

படையினரால் வழங்கப்பட்ட அனுமதியைத் தொடர்ந்து குறிப்பிட்ட சில தினங்களில் இம் மீனவர்கள் அரியாலை கடற்பகுதிக்குச் சென்று தொழில் செய்து திரும்பியுள்ளார்கள்.

இந்நாள்களில் இவர்கள் தொழில் செய்து கரை திரும்பும் நேரமும் படையினரால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்படும் இரு நாள்களிலும் காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை தொழில் செய்து திரும்பமுடியும். ஏனைய நாள்களில் காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரையே அனுமதி உண்டு.

எனினும் இந்நாள்களிலும் சரி வேறு நாள்களிலும் சரி எவரும் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத கல்முனைக் கடற் பகுதிக்குச் சென்று மீன்பிடிக்க முடியாது எனவும் படையினரால் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு குடாக்கடலில் நடைபெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து இக் கடற்பரப்பில் பாய் கொண்டு மீன் பிடிக்கக் கூடாது எனப் படையினர் தடைவிதித்தனர்.

இதனால் இம் மீனவர்கள் தாம் மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்ட கடல் எல்லையில் தமது வள்ளங்களில் மரக்கோல் மூலம் வலித்துச் சென்றே தொழில் செய்து கரை திரும்பினார்கள்.

எனவே படையினர் மேற்கொண்டுள்ள இம் மனிதாபிமான தளர்வு நடவடிக் கையை தாம் கடலுக்குச் செல்ல அனுமதிக் கப்பட்டுள்ள ஏனைய நாள்களிலும் அனுமதித்து பாய்கொண்டு மீன் பிடிக்கவும் குடாக் கடல் முழுவதும் தொழில்செய்யவும் படையினர் அனுமதி வழங்க வேண்டும் என குருநகர், பாஷையூர்,கொழும்புத்துறை மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-51)

## கசிப்பு விற்பனை செய்தவருக்கு 75 ஆயிரம் ரூபா அபராதம்


மந்திகை,செப்.22

கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவருக் குப் பருத்தித்துறை நீதிமன்றம் 75 ஆயிரம் ரூபா அபராதமும் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்துள்ளது. அபராதப் பணத்தைச் செலுத்தத் தவறினால் மேலும் ஒருவருடக் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தர விட்டது.

உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை ஸ்ரீ காந்தன் என்பவர் 15 லீற்றர் கசிப்புடன் பருத்தித்துறை மதுவரிப் பரி சோதகர்கள் குழுவிடம் சிக்கிக் கொண்டார்.

மதுவரிப் பரிசோதகர்கள் இக் கசிப்பு விற்பனையாளரை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே. அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தனர். எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். எதிரி முன்னரும் கசிப்பு விற்பனைக் குற்றத்திற்காக நீதிமன்றத்தின் தண்டனை பெற்றவர் என்றும் மன்றுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்தே எதிரிக்கு 75 ஆயிரம் ரூபா அபராதமும் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டு அபராதத்தை செலுத்தத் தவறின் மேலும் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. (202-281)




## பருத்தித்துறை பிரதேச அபிவிருத்திக்கு இருபது வட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

வடமராட்சி, செப்.22

பருத்தித்துறை வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கென இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 20 லட்சம் ரூபா நிதியினை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஒதுக்கியுள்ளார்.

இந்நிதி ஒதுக்கீட்டில், வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயப் புனரமைப்பு, வல்வெட்டித்துறை சனசமூக நிலைய மீள் கட்டுமானம், வல்வெட்டித் துறைபஸ்நிலைய மீள் கட்டுமானம் ஆகிய வற்றுக்கு தலா இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் -

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை கட்டட மீள் கட்டுமானத்துக்கும் அவற்றுக்கான உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற் கும் இரண்டு லட்சம் ரூபாவும், பொலிகண்டி ஆலடியில் அமைந்துள்ள சமுர்த்தி வங்கிச் சங்க மீள் கட்டுமானம், பருத்தித்துறை தும்பளை வீதியில் உள்ள தெருமூடிமடத்தின் மீள்கட்டுமானம் ஆகியவற்றுக்கு தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் -

வல்வெட்டித்துறை றோமன்கத்தோலிக்க தமிழ்க் லவன் பாடசாலை கணனிகளையும் அவற்றுக்கான உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கு தளபாடங்கள் வாங்கவும் புலோலி தென்மேற்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு தையல் மெசின்கள் வாங்கவும் அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை தண்ணீர் தாங்கியும், தண்ணீர்க் குழாய்கள் அமைக்கவும் தலா ஒரு லட்சம் ரூபாவும்-

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்க சமாசத்துக்கு தளபாடங்கள் வாங்கவும் வல்வெட்டித்துறை ஊரிக்காடு கழுகுகள் விளையாட்டுக் கழகத்துக்கு வியைாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கும் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்துக்கு போட்டோப் பிரதி இயந்திரம் வாங்குவதற்கும் தலா 75 ஆயிரம் ரூபா வீதமும் -

அல்வாய் திக்கம் மத்திய சனசமூக நிலையத்துக்கு தளபாடங்கள் வாங்குவதற்கும் வூல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்துக்கு புத்தகங்கள் வாங்குவதற்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202-236)

## மின்சாரம் தாக்கி இளைஞர் பலி

யாழ்ப்பாணம்,செப்.22

மின் இணைப்பைப் பெற முயன்ற போது மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் வேலணை, 3ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அ.செந்தூரன் (வயது -26) என்பவரே பலியானார்.சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.(202-78)

## ஊறணிக் கிராமத்தின் பாரதி வீதி புனரமைப்பு

கோப்பாய்,செப்.22

புத்தூர் கிழக்கு, ஊறணிக் கிராமத்தின் பாரதி வீதி புனரமைக்கப்படவுள்ளது.

மனிதநேய கூட்டமைப்பின் உதவியுடன் உணவுக்காக வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வீதி புனரமைக்கப்படவுள்ளது.

இப் புனரமைப்புப் பணிக்கென 6 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202-72)

## கோப்பாய் வைத்தியசாலைக்கு வழிகாட்டிப் பெயர்ப்பலகை

கோப்பாய்,செப்.22

கோப்பாய் வைத்தியசாலைக்குரிய வழிகாட்டிப் பெயர்ப்பலகை கோப்பாய் - மானிப்பாய் வீதியின் அருகில் கடந்த வாரம் நடப்பட்டுள்ளது.

இதன் மூலம் தூர இடங்களில் இருந்து வருபவர்கள் மருத்துவமனையை இலகுவாக இனங்காணக்கூடியதாக இருக்கும். (202-72)

## மோட்டார் சைக்கிள்-மிதிவண்டி மோதலில் இருவர் காயம்

யாழ்ப்பாணம்,செப்.22

மோட்டார் சைக்கிள்-மிதிவண்டி மோதியதில் இருவர் காயமடைந்த சம்பவங்கள் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளன.

கோண்டாவில் பகுதியில் ஓர் ஒழுங்கையில் இருந்து வீதிக்கு வந்த மிதிவண்டி எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியரான எஸ்.சுரேஸ் (வயது- 36) என்பவர் காயமடைந்துள்ளார்.

வரணிப் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு மோட்டார் சைக்கிள் - மிதிவண்டி விபத்தில் மிதி வண்டியில் சென்ற எம்.மதி பவானி (வயது-28) என்பவர் காய மடைந்தார்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (207-60)

## உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்துடன் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டமும் அறிமுகம்

யாழ்ப்பாணம், செப்.22

உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் செயற்படுத் தப்படும் வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டமும் அமுல் செய்யப்படுகிறது. அதன் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு கலப்பின தென்னம் நாற்றுகள் விநி யோகிக்கப்படவுள்ளன. இதன் அங்குரார்ப் பண நிகழ்வு புத்தூர்கமநல அபிவிருத்தித்திணைக்களநிலைய கேட்போர் கூடத்தில் கடந்த 13 ஆம் திகதி யாழ். மாவட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் வி.சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், யாழ். மாவட்ட மேலதிக பிரதித் திட்டப் பணிப்பாளர் ஜே.எக்ஸ். செல்வநாயகம்,யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன், கோப்பாய் பிரதேச செயலாளர் ஏ.மோன்ராஸ் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்ட சுற்றுச்சூழல் நிபுணர் ரி.எஸ். லோகீஸ்வரன் மற்றும் திட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கோப்பாய் பிரதேச செயலக பிரிவின் வேம்பிராய் கிராமத்தைச் சேர்ந்த 118 பயனாளிகளுக்கு நாற்றுக்களும் அவற்றின் வளர்ச்சியைக்கூட்டி விளைச்சலை அதிகரிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட அளவில் ஆறு மாத காலத்துக்குத் தேவையான உரக் கலவையும் இந் நிகழ்வில் வழங்கப்பட்டன. (202)

## இலங்கை வங்கியில் 18⁺ வைத்திருக்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம், செப்.22

இலங்கை வங்கியில் 18⁺ கணக்கு வைத்திருக்கும் மாணவர்களில் கடந்த ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

2007 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லது தேசிய ரீதியில் சகல பாடப் பிரிவுகளிலும் முதல் 5 நிலைகளுக்குள் வந்தவர்கள் இப் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம்.

அத்துடன் வங்கியின் 18 + கணக்கில் 01.01.2007 தொடக்கம் 31.12.2007 வரை 5 ஆயிரம் ரூபாவை நிலுவையாக வைத்திருக்க வேண்டும்.

தகைமையுள்ள மாணவர்களைத் தாங்கள் கணக்கு வைத்துள்ள வங்கி கிளை முகாமையாளரை தொடர்பு கொள்ளுமாறு இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் கேட்டுள்ளார்.(202)

## நெடுந்தீவு அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவின் அபிவிருத்திப் பணிகளுக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என நெடுந்தீவு உதவி அரச அதிபர் என். திருலிங்கநாதன் தெரிவித்தார்.

இந் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இப்பிரதேசத்தில் ஐந்து வேலைத் திட்டங்கள் செய்யப்பட உள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-300)



உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் செயற் படுத் தப்படும் வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்[illegible] அதிபர் கே.கணேஷ், வடக்கு, கிழக்கு வீட மைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன் ஆகியோர் மங்கள் விளக்கேற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். அரச அதிபர் பயனாளி ஒருவருக்கு தென்னங்கன்று வழங்குவதையும் பயனாளிகளில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்

ளி ... குறிப்பிடப்படும் நிரந்தரப் பதவிகளுக்கு தகுதியானவர்க ...ந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

...பாதுமுகாமையாளர்: குறி.இல. 101:08

...ம்பளத் திட்டம்: 11200- 14100 / 140 10, 150 10

**தகைமை:**

அ) கூட்டுறவுப் பணியாளரின் 9ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டப் பதவியில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டப் பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது,

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டப் பதவியில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்,

அல்லது,

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்/ க. பொ. த.உயர்தரப் பத்திரத்தில் மூன்று பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்டவர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

02. கணக்காளர்- குறி இல. 104:09

சம்பளத் திட்டம்: 10950- 13650 / 130 10, 140 10

**தகைமை:-**

அ.கூட்டுறவுப் பணியாளரின் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கு அல்லது உட்துறைக் கணக்காய்வு லிகிதர் பதவியில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது உட்துறைக் கணக்காய்வாளர் அல்லது கணக்கு லிகிதர் பதவியில் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்,

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்குத் துறையிலான 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்,

அல்லது

இ.கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப் பத்திரம்/ க.பொ.த. உயர்தரத்தில் கணக்கியல் பாடத்திலான சித்தி அடங்கலாக 03 பாடங்களில் சித்தியும் ஆறு (6) வருடங்களுக்கு குறையாத அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் தொடர்பான அனுபவம்.

**வயது:**

விண்ணப்ப முடிவு திகதியன்று 23 வயதுக்குக் குறையாமலும் 45வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(சங்கப் பணியாளர்களுக்கு இவ் வயதெல்லை பொருந்தாது)

விண்ணப்பப் படிவத்தையும், மேலதிக விவரங்களையும் சங்கத் தலைமை அலுவலகத்தில் வேலை நாள்களில் ரூ.10 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

சுன்னாகம்
20.09

சி.குமரவேல்
தலைவர்.

# சைவமும் தமிழும் தழைத்தோங்கிட நீர்வேலிப் பதியினில் கல்லூரி அமைத்திட்ட முதலியார் அத்தியார் அருணாசலம்

செயற்கரிய செயல்களைச் செய்தவர்களை அதுவும் கல்வித் தொண்டு, சமயத் தொண்டு, சமூகத் தொண்டு எனப் பலவகையான தொண்டுகளைச் செய்து பெருமை கண்டவர்களை நன்றிக் கண்கொண்டு நினைவு கூர வேண்டியது எமது தலையாய கடமையேயாகும்.

அந்த வகையில் நீர்வேலிக் கிராமத்தில் இன்று கல்விப் பணியாற்றிக் கொண்டிருக்கும் அத்தியார் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் முதலியார் அத்தியார் அருணாசலம் *J.P.* அவர்கள் இன்று எம்மால் நினைவு கூரப்பட வேண்டிய பெருமைக்குரியவர்.

19 நூற்றாண்டிலே யாழ்.குடாநாட்டில் சைவமும், தமிழும் தழைக்கத் தொண்டாற்றியவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர், சி.வை.தாமோதரம்பிள்ளை, கோப்பாய் சபாபதிநாவலர் போன்ற பெரியோர்கள். இந்த வரிசையில் அவர்களைத் தொடர்ந்து நீர்வேலி அத்தியார் அருணாசலம், புத்தூர் மழவராயர் கந்தையா, சேர் பொன்.இராமநாதன், பருத்தித்துறை வேலாயுதம் போன்றவர்கள் கல்விப்பணியாற் றிய பெருமைக்குரியவர்கள்.

''தோன்றிற் புகழோடு தோன்றுக'' என்னும் வள்ளுவர் வாக்கிற் கிணங்க 27.08.1887இல் பிறந்தவரே அத்தியார் அருணாசலம் அவர்கள்.

நீர்வேலியில் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட திண்ணைப் பள்ளிக்கூடம்; அவரது மகன் சிவப்பிரகாச பண்டிதர் அவர்களால் சைவப்பிரகாச வித்தியாசாலையென நடத்தப்பட்ட காலத்தில் அவ்வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றதோடு, ஆங்கிலக் கல்வியை கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியிலும், மேல் வகுப்புக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்றுத் தேறினார்.

தனது 20 ஆவது வயதில் 1907 ஆம் ஆண்டு கொழும்பில் ஆங்கிலேயரால் நடத் தப்பட்டு வந்த கொம்மேர்சல் கொம்பனியில் களஞ்சியப் பொறுப்பாளராகப் பதவியேற்றார்.

காலம் உருண்டோடியது சிவசங்கர பண்டிதர் மகன் சிவப்பிரகாச பண்டிதரால் நடத்தப்பட்டுவந்த சைவப்பிரகாச வித்தியாசாலை சிவப்பிரகாச பண்டிதர் சிவகதியடைய அவரது மகன் நடராசபிள்ளை பண்டிதரால் நடத்த முடியாத நிலையில் விற்கவேண்டியிருந்தது.

இதனைப் பாதிரிமார் கொள்வனவு செய்ய முயற்சிப்பதான செய்தி கொழும்பில் இருந்த அத்தியார் அவர்களின் காதுக்கெட்டியது. உடனே அங்கிருந்து விரைந்து வந்து மேற்படி பாடசாலையைத்தானே விலை கொடுத்து வாங்கிக் கொண்டார்.

தனது கிராம மக்கள் அயற்கிராம மக்களும் கல்வியறிவுடையவர்களாக விளங்க வேண்டும், மற்றவர்களால் மதிக்கப்பட வேண்டும் எனப் பெரு விரும்பம் கொண்டார்.

11.02.1928 இல் அத்தியார் ஆங்கில, தமிழ்ப்பாடசாலை என்னும் பெயரில் இப்பாடசாலையை ஆரம்பித்தார்.



அத்தியார் அவர்களின் அறப்பணி யினாலேயே இன்று நாம் காணும் பெரிய மேடையுடன் கூடிய பிரமாண்டமான மண்டபம், ஆய்வுகூட அறைகள், நூல் நிலையம், தனியான அதிபர் அலுவலகம், வடக்கே நீண்ட மண்டபம் போன்ற அமைப்புக்களுடன்; விசாலமான விளையாட்டரங்கையும் கொண்ட அத்தியார் இந்துக் கல்லூரியைக் காண்கின்றோம். இந்தப் பாரிய கட்டட அமைப்புகளுக்கோ, காணி கொள்வனவுக்கோ யாரிடமும் அத்தியார் நிதி சேகரிக்கவில்லை.இந்த அறிவாளன் தனது சொந்தப்பணத்தைக் கொண்டும், தனது உடைமைகளை ஈடுவைத்துக் கடன்பட்டும் இந்தப் பணிகளைச் செய்துள்ளார். அந்த வள்ளலின் பணிகளுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் இன்றைய கல்வி நிர்வாகம் மேலும் கட்டடத் தொகுதிகளை அமைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

கல்விப்பணியாற்றிய அத்தியார் அவர்கள் சமயப் பணியும் சளைக்காது செய்து இந்து சமய வளர்ச்சிக்கு உதவியவர் என்றால் மிகையாகாது. நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலில் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டி

## தன் சொந்த உடைமைகளை ஈடுவைத்துப் பெற்ற பணத்தை கல்லூரியின் மேம்பாட்டுக்காக செலவழித்த செம்மல்

தரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட புராண படனத்தை மரபு பிறளாது தொடர்ந்து செய்துவந்த பெருமைக்குரியவர், கந்தபுராணப்படிப பிற்கு உபயகாரர்கள் இல்லாத இடைவெளிகளைத் தானே அந்த உபயங்களையேற்றுச் செய்து வந்த சான்றுளர் இவர்.

நீர்வேலி வாய்க்கால் தரவைப்பிள்ளையார் கோயில், அரசகேசரிப் பிள்ளையார் கோயில் என்பனவற்றிலும் புராண படனங்கள் செய்து வந்தமை மறக்க முடியாது.

கல்வித் தொண்டு, சமயத் தொண்டு செய்துவந்த அத்தியார் சமூகப் பணிகளும் செய்து மக்களின் நன்மதிப்பைப்பெற்றுக் கொண்டார்.

நீர்வேலிக் கிராமச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் என்பனவற்றை ஆரம்பித்து நீண்ட காலம் அவற்றின் தலைவராகவிருந்து கிராம அபிவிருத்திப் பணிகள் செய்துள்ளார். கிராமத்தில் மக்கள் போக்குவரத்துக்கு வசதியாக ஆங்காங்கே ஒழுங்கைகள், வீதிகள் , வெள்ளவாய்க்கால்கள் என்பன அமைத்து வசதிகள் செய்து மக்களின் நன்மதிப்பைப்பெற்றுக் கொண்டவர்.

1950 ஆம் ஆண்டு இலங்கையின் முதற் பிரதமரான கௌரவ டி.எஸ்.சேனநாயக்கா அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த போது அவருக்கு கோப்பாய்த் தொகுதி மக்களால் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் அத்தியார் அருணாசலம் தலைமையில் பிரமாண்டமான வரவேற்பு விழா நடத்தப்பட்டது. அப்போது பாடசாலையின் பிரமாண்டமான மண்டப அமைப்புக்களையும், அத்தியாரின் தன்னலமற்ற சேவைகளையும் அறிந்து பிரதமர் பாராட்டியதோடு, 1951 ஆம் ஆண்டு அத்தியார் அவர்களுக்கு ''முதலியார்'' என்ற கௌரவப்பட்டமும் வழங்கிக் கௌரவித்தார்கள்.

1953 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற 2 ஆவது எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழாவின் போது இலங்கை மக்கள் மத்தியில் கௌரவிக்கப்பட வேண்டியவர்களின் பட்டியலில் முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்களின் பெயரும் இடம் பெற்றது

இதனால் அத்தியார் அவர்களின் புகழ் இலங்கையில் மட்டுமின்றி உலகளாவிய ரீதியில் கௌரவிக்கப்படலாயிற்று. சோல்பரி பிரபு மூலம் அன்னாருக்குப் பாராட்டுக் கடிதமும், வெள்ளிப் பதக்கமும் வழங்கப்பட்டன.

1960 ஆம் ஆண்டு அவரது பலவகைப்பட்ட சேவைகளையும் பாராட்டி சமாதான நீதவான் பட்டமும் வழங்கிக் கௌர விக்கப்பட்டது. நீர்வேலிக் கிராமத்தின் முதலாவது சமாதான நீதவான் என்ற பெருமையும் இவருக்கே உரியது. இப்படியாகப் பல கௌரவப்பட்டங்கள் பெற்ற முதலியார் அத்தி யார் அருணாசலம் *J.P.* அவர்கள் நீர்வேலிக் கிராமத்துக்கு "கல்லூரி தந்த வள்ளல்" என்னும் பெருமைக்கு உரியவர்.

தனது 74 ஆவது வயதில் 1961 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி இவ்வுலக வாழ்வை இனிது துறந்து பொன்னம்பலவன் பொற்பதமடைந்து விட்டார்கள்.

(இன்று நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் தினமும் நடைபெறுவதையிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது)

**சமூகசோதி த. பரராசசிங்கம் (ச.நீ)**
பழைய மாணவன், அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.

# மரண அறிவித்தல்

## *மாரிமுத்து அப்புத்துரை*



யாழ்ப்பாணம், 205/4, ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து அப்புத்துரை நேற்று (21.09.2008) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து- மரியம்மா தம்பதியரின் பிரியமான மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா- பத்தினி தம்பதியரின் அன்பு மருமகனும் லட்சுமியின் ஆருயிர்க் கணவரும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், பொன்னுத்துரை, கந்தையா, அன்னம், ஐயாத்துரை, நடராசா, நவரட்ணம் மற்றும் சரஸ்வதி, மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமுள்ள சகோதரனும் காலஞ்சென்றவரான செல்லம்மா மற்றும் சின்னத்தங்கச்சி ஆகியோரின் நேசமுள்ள மைத்துனரும் புலம்பெயர்ந்தவர்களான குலேந்திரன், பாலேந்திரன், உமாதேவி, மைதிலி, கௌரி, ரேணுகா, ஜெயந்திமலர் மற்றும் சுமதி (பவா- யாழ்ப்பாணம்) ஆகியோரின் ஆசைத் தந்தையும் றஜீத்தா, ஜேசேந்தி, பாலசுந்தரம், ராஜன் (குமாரலிங்கம்), ஜெயா (மகேந்திரன்), ஜெயராம், நற்சீலன், சிறீதர் (நோபிள் பிறிண்டேர்ஸ், துவாரகா மல்ரிபொட்) ஆகியோரின் அருமை மாமனும் பிரவீனா, நிவேதா, பானுஜன், கிருசாந்த், கீர்த்திகா, தூரிகா, செந்தூரன், சிந்துஜா, செந்துஷன், கௌசல்யா, கௌசிகா, திவ்வியன், நிரோசன், தீபிகா, அலன் பிரசாந்த், துவாரகன் ஆகியோரின் உயிரான தாத்தாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2008) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12 மணிக்கு கொட்டடி வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*205/04, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(78655)

தகவல்:
சிறீதர் (மருமகன்).






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளிடமிருந்து நாச்சிக்குடா வீழ்ச்சியுறுமாகவிருந்தால் மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தரைவழி பாதை அமையும்

**சண்டே ரைம்ஸ்' களநிலை ஆய்வாளர் இக்பால்அத்தாஸ் நேற்று ஞாயிற்றுக் கிழமை (20.09.2008) எழுதியிருந்த ஆய்வுக் கட்டுரையின் ஒரு பகுதி**



## படையினர் இப்படி நம்புகிறார்கள்

கிளிநொச்சி நகருக்கு அப்பால் சில நூறு மீற்றர் தொலைவில் வன்னியிலேயே மிகப்பெரிய அடுக்களை(குசினி) இங்கு அமைந்திருந்தது. ஓலைக் கிடுகுகளால் வேய்ந்து அமைக்கப்பட்டிருந்த இந்த இடம்தான் வன்னிக்கான மத்திய உணவு தயாரிப்பு மையமாக விளங்கியது எனலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் பராமரிக்கப்பட்ட இந்த அடுக்களை யானது போராளிகளுக்கு மாத்திரம் உணவுகளைத் தயாரிக்கவில்லை. அங்கு விஜயம் செய்த ராஜதந்திரிகள்- ஊடகத் துறையினர் மற்றும் விருந்தாளிகள் அனைவருக்கும் உணவு படைப்பதாய் இருந்தது. அங்கே அறவிடப்பட்ட கட்டணங்கள் கொழும்பிலுள்ள எந்த ஒரு 5 நட்சத்திர ஹோட்டல் கட்டணத்திற்கும் குறைவாக இருந்திருக்க முடியாது. சேவகர்கள் நீண்ட கைச் சேர்ட்டுகளுடன் கறுப்பு போ, ரைகளுடனும் உணவு பரிமாறினார்கள்.

கடந்த வாரம் கிளிநொச்சியில் ஆட்டிலறி ஷெல் குண்டுகள் வந்து விழத் தொடங்கியதும் இந்த மத்திய உணவு தயாரிப்பு நிலையத்தை கழற்றி அப்புறப்படுத்தத் தொடங்கினார்கள். உணவு கையிருப்புக்கள், சமையல்காரர்கள், பாத்திரங்கள் யாவற்றையும் தென்பகுதியில் உள்ள ஓர் இரகசிய இடத்துக்கு நகர்த்திக் கொண்டார்கள்.

விடுதலைப் புலிகளின் இந்த நடவடிக்கையானது அவர்களின் அரசியல் மத்திய பிரதேசமான கிளிநொச் சியின் மனோநிலை எப்படி இருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுவதாகவிருந்தது. இங்கிருந் துதான் அவர்கள் சமாந்தரமாக நிர்வாகம் ஒன்றை நடத்தி வந்தார்கள். பொலிஸ் நிலை யங்கள், நீதிமன்றங்கள், சுங்க திணைக் களம் போன்ற நிதி சேகரிப்புப் பிரிவுகள் அனைத்தையும் நடத்தினார்கள். மத்திய அடுக்களையைப் போன்றே தமது அலு வலகங்கள், மற்றும் பொருள்களை அங்கி ருந்து பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த் திக் கொண்டார்கள். இப் பகுதிக்குள் வந்தி ருந்த இடம் பெயர்ந்த மக்கள் அனைவரையும் உடனடியாக வெளியேறும்படி கூறப்பட்டது. இவர்கள் வட்டக்கச்சி, ராமநாதபுரம், தர்மபுரம், விஸ்வமடு, உடையார்கட்டு, புதுகுடியிருப்பு போன்ற பகுதிகளில் திறந்தவெளி மற்றும் தரிசு நிலப் பகுதிகளில் தற்காலிக தங்குமிடங்களை ஏற்படுத்திக் கொண்டு தங்கலானார்கள்.

அரசியல் கட்டமைப்புக்களை கழற்றி அப்புறப்படுத்துவதும், இடம்பெயர்ந்து வந்தவர்களை அகற்றுவதும் அவசர பின்வாங்கலுக்கு ஆயத்தப்படுத்துகிறார்கள் என்பதாக கொள்ள முடியாது. பதிலாக ஏனைய பகுதிகளிலிருந்தும் போராளிகளை அவர்கள் கொண்டுவந்து குவிக்கத் தொடங்கியிருந்தார்கள். அவசர அவசரமாக புதிய தற்காப்பு அரண்களை ஏற்படுத்தினார்கள். கடைசிநேர மோதலுக்குத் தேவையான ராணுவப் பொருள்களையும் விநியோகிக்கத் தொடங்கியிருந்தார்கள். இதற்குக் காரணம் அரசபடைகள் அவர்களின் கதவடிக்கு வந்துவிட்டார்கள் என்பதே.

### வழமையான நடவடிக்கை ஸ்தம்பிதம்

இந்த அவசர ஏற்பாடுகளில் புலிக ளின் வழமை யான ஏனைய நடவடிக்கைகளை சர்வதேச இணையத் தளங்களுக்கு படங்கள் முதலியவற்றைக் கொண்டு அறிக்கை விடுவது போன்ற செயற்பாடுளை தாமதப்படுத்தி விட்டது. சர்வதேச வலையமைப்பு, டெலிபோன் சேவை போன்றவை ஸ்தம்பிதமடைந்து விட்டன. பழைய முருகண்டியிலிருந்து கிளிநொச்சி நகரில் பாண்டியன் உணவு விடுதி வரையில் குடியிருந்த மக்களில் சுமார் 60 வீதமானோர் அவ்விடத்தை விட்டு வெளியேறி விட்டனர். அப்பகுதியில் செயல்பட்ட

## கடும் எதிர் நடவடிக்கைகளுக்கு புலிகள் பலத்த ஏற்பாடு

ஏறத்தாழ 5,000 டெலி போன்களில் அரச பணிமனைகளிலுள்ள ஒன்றிரண்டு மாத்திரமே சனிக்கிழமை செயல்படுவதாகவிருந்தன.

கடந்தவாரம் முற்பகுதியில் பாதுகாப்புப் படைகள் அக்கராயன் பகுதியில் கடும் மோதல்களில் ஈடுபட்டிருந்தார்கள். இதிலும் இருதரப்பும் பெரும் இழப்புக்களை சந்தித்தன. இருந்தாலும் ராணுவத்தின் 57 ஆவது படையணியினர் அதிக பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டு ஏ-9 வீதியை நோக்கி மேலும் முன்னேறியுள்ளனர்.

ஐயபுரம் பகுதியில் கெரில்லா நிலைகளை தகர்த்துக் கொண்டு இவர்கள் முன்னேறியுள்ளனர். நேற்று முன்தினம் கொக்காவிலில் இருந்து ஒன்றரை கி.மீ.தூரத்தில் அவர்கள் இருந்துள்ளார்கள். இரணை மடுவைக் கடந்தால் கிளிநொச்சியை அவர்கள் சென்றடைவார்கள். கொக்காவிலிலிருந்து 22 கி.மீட்டர் தூரமே இருக்கிறது கிளிநொச்சிக்கு.

### காலம் பிடிக்குமா?

முன்னேறிவரும் படையணிகளை எதிர்கொள்ள போராளிகள் செய்துவரும் ஆயத்தங்களைப் பார்க்கையில், பணியை செய்து முடிக்க படையினருக்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதைக் கூற முடியாமல் இருக்கின்றது.



இந்த களநிலைகளைக் கருத்தில் கொண்டுதான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் வெளி நாட்டு பத்திரிகையாளர் சங்கத்தின் இரவு உணவு விருந்தின் போது இந்த வருடம் டிசம்பர் மாதம் அளவில் கிளிநொச்சி தமது கட்டுப்பாட்டின்கீழ் வந்துவிடும் என்று கூறியிருந்தார்.

''டிசம்பர் மாதம் அளவில் கிளிநொச்சியை நாங்கள் பிடித்து விடுவோம் என்று எதிர்பார்க்கின்றோம். மிக விரைவிலேயே வடக்கின் ஏனைய பகுதிகளும் எம்மிடம் வரும். சரியான கால நேரத்தை என்னால் கூறமுடியாது'' என்று அவர் கூறியி ருந்தார். ஆனால் சிரேஷ்ட ராணுவ அதிகாரிகள் இதற்கு மாறாக கருத்து உடையவர்களாக மிகவும் முன்கூட்டியே காரியம் முடிந்துவிடும் என்பது அவர்களின் நம்பிக்கை.

பொதுவாக கொக்காவில் பதியிலிருந்து தெற்கு நோக்கி பாலமோட்டைக்கு தெற்காக அகன்றதோர் களமுனையை படையினர் அமைத்துள்ளனர். வன்னியின் மேற்கு பகுதியின் இந்த நிலை காணப்படுகின்றது. இந்த களமுனையானது ஏ-9 வீதியை எதிர்நோக்கி இருப்பதுடன் வன்னியின் மேற்கில் புலிகளின் நிலைகளுக்கு ஒரு தடுப்பு வேலியாக அமைகின்றது. வடக்கில் போராளிகள் தமது வலுவூட்டப் பட்ட தற்காப்பு அரண்களை முகமாலையில் கொண்டுள்ளனர். கடந்த ஏப்ரலில் முன்னேறிவந்த படைகளுக்கு பலத்த சேதங்களை ஏற்படுத்தி தடுத்து நிறுத்தியிருந்தனர். போராளிகள் வசமுள்ள வன்னியின் தெற்கிலிருந்து ராணுவத்தின் 59 ஆவது படையணி முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஆனால் போரா ளிகளின் நிலைகளை எதிர்கொள்ள இவர்கள் வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கும்.

இங்கு வடக்கு நோக்கி முன்னேறும் படையணிகள் இன்னொரு நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளனர். பக்கவாட்டிலும் அவர்கள் தமது நகர்வை அகலப்படுத்தியுள்ளனர். இப்பகுதியில் படை நடைவடிக்கைகளால் போராளிகள் கிழக்கு நோக்கி நகர்வதைத் தடுப்பதாகவிருக்கும் என்று கருதப்படுகின்றது. இப்பகுதியில் நீண்ட பதுங்கு குழிகளை புலிகள் வெட்டியுள்ளனர். படையணிகள் முன்னேறுவதைத் தடுப்பதற்காக இவை வெட்டப்பட்டுள்ளன.

நாச்சிக்குடாவுக்கு தெற்கில் கடுமையான மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. நாச்சிக்குடாவைக் கைப்பற்றி முன்னேறும் படையினரின் இரண்டு முயற்சிகளை கடந்த வாரம் இப் பகுதியில் புலிகள் தடுத்து நிறுத்தி விட்டார்கள்.

### மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தரைவழிப்பாதை?

வன்னேரிக் குளத்துக்கருகில் கரையோரப் பகுதியிலிருந்து உள்நோக்கி இந்த படை நிலை காணப்படுகின்றது. இப்பகுதியில் கடந்த மாதங்களில் ஒரு மண்மேட்டை பெரும் குழியொன்றுடன் அமைத்திருந்தார்கள். புலிகளால் நாச்சிக்குடாவிலிருந்து கிழக்கு நோக்கி பலமைல் தூரத் துக்கு இம் மண்மேடு அமைக்கப்பட்டுள்ளதாம். இப்பகுதியில் படையினர் இப்போது பூநகரியிலிருந்து 30.கி.மி. தூரத்திலேயே இருக்கிறார்கள். இப்பகுதியைக் கைப்பற்றினால் மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு தரைவழிப் பாதையை அமைக்க முடியும் என்று ராணுவம் நம்புகின்றது.

### வடக்கு முனையில்

வடக்கிலிருந்து கிடைக்கும் தகவல்களின்படி அப்பகுதியில் புலிகள் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளார்கள். அதிக போராளிகளை கொண்டுவந்துள்ளதுடன் ராணுவ தளபாடங்களையும் மோட்டார் போன்ற ஏனைய பொருள்களையும் குவித்துள்ளார்கள்.

பூநகரிப் பகுதியிலிருந்து புலிகள் நாச்சிக்குடாவை நோக்கி வரும் படைகள் மீது கடும் தாக்குதல்களை நடத்த புலிகள் ஏற்பாடு செய்கிறார்கள் என்ற சந்தேகம் படைகளின் சில பகுதியினருக்கு ஏற்பட்டிருக்கின்றது.

(ப)

---

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

கடந்த மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள் 'உதயனுக்கு' அனுப்பிய முடிவுகள் வருமாறு:-

**யாழ். இந்து ஆரம்ப பாடசாலை**

க.ஸ்ரீதுசன்(162),ஸ்ரீ.ஸ்ரீசங்கீதன் (160), ந. செந்தூரன்(157), ஆ. ஆரங்கன் (157), ஜெ. டயானந்தன்(157), க. சர்வேஸ்வரசர்மா (155), ந.சுமித்திரசாந்(154), ப.கேனுஜா (154),த.தக்ஷயன்(153),லோ.தர்ஷிகன்(153),

சி. பிரவீன்(153),உ.கஜானி(152), இ.சஜீந்திரா(149), சு.திவாகரன்(149), ப. வைகுந்தன்(149), ச.சாயிசுதன்(149), அ. தயாசாகரி(148), பா. ஸ்ரீஷாயுச்ஜா(148), சு. சிவசாந்(146), ப.பபிலன்(145),

த.கரித்தாஸ்(145),சி.வைஸ்ணவி (145), ச. யாழரசன்(144), சி. சிவசங்கரி( 144), க.யுவநீதா(144), ச.நிவேணுதன்(143), மு.காயத்திரி(143), உ.நவரதன் (142), யெ.சதுர்சனன்(142), த.டினோயன் (142),

த.நாகலோஜினி(142), கி.சிவமைந்தன்(141), நா. துவாரகன்(141), பா.கஜேதிரன்(141), இ.ஆருரன்(141), த.காருண்யன்(141),பா.டஜீவ்(141),வி.கெளதமி(141),பா.லோகப்பிரியன்(141), யோ.துளசிகன்(140),

த. ஜீவதாரணி(140), த.லக்ஷிகா (138), வீ.கஜபவன்(138), சி.விதுசனசர்மா(138), மு. நிவேதா(138) , ஈ. மகிழ்யா (137), செ. துஷ்யந்தி(137) சி.சிவநீ'தன் (136), கு.கயந்தன் (136), சி.ஆதிரை (136),

ச.மதுசன்(135), ஜெ.பார்த்தீபன் (135), இ.கிருஷ்ணாகினி(135), க.அஜிதா (135), யெ.காஞ்சனா(135), ஜெ.பேரழகன் (134), இ. சஜீவன்(134), சு.மிதுன்ராஜ்(134), க. சிவசொரூபி(134), யோ.பானுஜா(133),

ஸ்ரீ.நிவேதன்(133), பி.மதுஷன் (133), சு. அபிராம்(132), பொ.யேமிகா(132), ஸ்ரீ. பிரணவன்(132), ச.கோவர்த்தனன் (131), சி. விதுர்சன்(131), சி.பியாஸ்கரா(131), சி. திலக்ஷன்(131), அ.அகீபன்(130),

இ.மாதினி(130), சோ.கஜன்(129), சோ. மதுஷன்(129), லோ. பகவான்(128), சு. லாவண்யன்(128), கு.லயசுஜன்(128), சி.கபிலன்(128), க.சினோயிதா(128), ச. கீர்த்தனா(128), சா.ஜிருசிகன்(127),

மோ.விதுர்ஷா(127), பு.கஜானன் (127), நி. சஞ்சீவன்(126), த.உமேஷ்(126), ஸ்ரீ. ஹர்சனா(126), சி.சாயிசங்கர்(126), தி. நர்மதா (125), அ.கோபிஜா(125), பு.ரட்ஷிகா (124), சி. டர்ஷிகா(124),

க.ஜெயகாந்(123), ச.கலையரசி (123), ந. சஞ்சீவ்(123), வி. கௌசல்யா(123), பி. தர்[illegible]னா(123), க.கஜிலா(123),இ.நிதுசன் (122), ச.மதுஷா(121), றே.விதுஷா (121), ச.சானுஷன்(120),

சி. ரஞ்சித்(120), சி. ராமானுஜன்(120), ர.மிதுளா(120), சி.விசாகனன்(119), யோ. ரஞ்சுதா(119), ஜெ. ஜவஹர்(118), யோ.பிறேமரூபன்(118), ஞா.அபர்ணா(118), க.பிரணவன்(117)

ஜெ.விதுஷா(117), செ.கேதாரகன் (117), அ.சாரங்கி(117), சு.பிரணவன் (116), சு.அமலன்(116), ம.கிங்ஷன் (116), ஜெ.ஸ்ரீரம்மியா(116), ற.கஷீலா(116), வி.ரம்மியா(116)

**கோப்பாய் தெற்கு றோ.க.த.க பாடசாலை**

உ.விதுர்சனா(126), சி.துளசியன் (138), பி. சர்மினி(137), கு.கவிதாஸ்(128), சு. யசிகாந்தன்(118), செ. மதனிகா(116), அ. அருண்ராஜ்(116).

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**

எம்.கோகுலன்(152),ஆர்.சுதர்சன் (151), எஸ்.பிரணவசுதன்(145), கே.சனார்த்தன்(143), கே.தர்ஷன் (143), எஸ்.தர்சிகா(142), பி.பிரதீஸ்(141),ஆர்.இலக்கியா(137),ரி.பரதன்(133),எஸ்.குலராஜ்(132), எஸ்.சிவாகரன்(132),

ரி.தேவசயன்(132), எஸ்.அனோஜா (131),ரி.சுதர்சனன்(126),கே.பானுஜன் (125),என்.நிஷோதா(124),ரி.மதுஷன் (121),என்.நீவிதா(121),கே.மோகனா (121), பி.கஜலக்ஷன் (120),என். யசிந்தன் (120), கே.தனேஷன் (119),ரி.பவிதா (117), எஸ்.சரவணன் (117),கே.தனலினி(117), வி.வித்தியாகரன் (11[illegible]), கே.ஜனாத்தனன் (115).

(29-218-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி மதியாபரணம் பாலசுப்பிரமணியம்



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் பெரிய மதவடி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மதியாபரணம் பாலசுப்பிரமணியம் (18.09.2008) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய வருமானவரி இலாகா லிகிதர், நீதிமன்ற மொழி பெயர்ப்பாளர்) பாசமிகு மனைவியும் செல்லையா - அபிராமிப்பிள்ளை தம்பதியரின் மூத்தமகளும் செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் உதயணன் (C.T.B - கோண்டாவில்), அசோகன் (ஜேர்மனி), மதிவதனி (நோர்வே), ஆகியோரின் அன்புத் தாயும் ராகினிதேவி (ராதா), கலாதேவி (ஜேர்மனி), சகிகரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியும் மயூரன், நிருபன், அஜிக்கா, அரோஜிக்கா, அரோஜன், தமிழினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற மாசிலாமணி மற்றும் குமாரசாமி (கனடா), காலஞ்சென்றவர்களான நடராசா, துரைராசா, படைவீரசிங்கம் மற்றும் மகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் உடன் பிறந்த சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.09.2008) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரியமதவடி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
பா.உதயணன்
(மகன் - C.T.B).

(78624)

## புத்தூர் கிழக்கில் மரநடுகைத் திட்டம்

கோப்பாய்,செப்.21

புத்தூர் கிழக்கு பிரதேசத்தில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையோடு மரநடுகைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு கடந்த வியாழக்கிழமை புத்தூர் கிழக்கு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தில் நடைபெற்றது.

நமது சூழலை ''நாமே பாதுகாப்போம்'' என்ற திட்டத்தின் அடிப்படையில் இந்நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(202-72)

# வேலை வாய்ப்பு

பருத்தித்துறை பொதுச்சந்தைக்கான புதிய கட்டட நிர்மாணப்பணி ஸ்தலத்திற்கு கீழ் காணப்படும் பணியாள்கள் நாளாந்த ஊதிய அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்படவுள்ளனர். பொருத்தமானவர்கள் 18.09.2008 தொடக்கம் 23.09.2008 வரையான காலப்பகுதியில் நேரில் சமுகம் அளிக்கவும்.

01. Shuttering Capenters -
சட்டறிங் வேலை அனுபவமிக்க தச்சு தொழிலாளர்கள்

02. Bar Benders -
கம்பி வேலை அனுபவமிக்க தொழிலாளர்கள்

03. Electricians -
அனுபவமிக்க மின் இணைப்பாளர்கள்

04. Plumbers -
அனுபவமிக்க நீர் குழாய் பொருத்துனர்கள்.

தொடர்புகளுக்கு
முகாமையாளர்,
பொதுச்சந்தைக்கான புதிய கட்டட நிர்மாணப்பகுதி,
பேருந்து நிலையம், பருத்தித்துறை.

(78543)


# STUDY IN UKRAINE (EAST EUROPE)

**MBBS/MD** With O/L'S - 7years
With A/L' - 6years

LUGANSK STATE MEDICAL UNIVERSITY
*Recognized By Sri Lankan Mdical Council*

100% VISA SUCCESS

எமது நிறுவனத்தின் மூலம் கடந்தமாதம் அனுப்பப்பட்ட மாணவர்கள் அனைவரும் எதுவித சிரமமுமின்றி VISA வை பெற்றதுடன் தற்போது UKRAINEஇல் தமது கல்வியை தொடர்கின்றனர். (Royal College Colombo, Hindu College Colombo, St.Patricks College Jaffna, St.John's College Jaffna St.Michael's College Batticaloa, Holy Family Convent Jaffna, Hindu Ladies College, Ramanathan Hindu Ladies School, Adventist International College Vavuniya, Vavuniya Maha Vidyalayam. ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவர்கள்.

SPONSOR/ BANK BALANCE தேவையில்லை

UKRAINE ஆனது கிழக்கு ஐரோப்பிய நாடென்பதால் UKRAINE STUDENT VISA உடையமாணவர்கள் ஐரோப்பாவில் உள்ள அண்டைநாடுகளாகிய Poland, Romania, Austria , Italy, France, Spain, Germany.U.K. ஆகிய நாடுகளுக்கு மருத்துவ கல்வி மற்றும் பயிற்சி நிமித்தம் சென்றுவருவதற்கான அரியவாய்ப்புண்டு.

Call: 0777 - 818/ (011) 4512591
scholinfo@yahoo.com

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50 Galle Road, Colombo.06


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## இணுவில் மேற்கு
## அமரர் நவரத்தினம் சரோஜினிதேவி
## (செல்வம் மெக்கானிக்)



எம் அம்மாவே! எங்களுக்கெல்லாம் நல்வழிகாட்டிய அன்புத் தெய்வமே!
அன்பின் உறைவிடமே! பாசத்தின் திருவிளக்கே!
அன்பால் எமை அரவணைத்து
பண்பால் பலர் போற்ற வாழ்ந்த உத்தமியே!
என்றும் கனிவான முகமும் எதற்கும் கலங்காத
உள்ளமும் கொண்ட எங்கள் பாசக்கடலே!
எங்குதான் சென்றீர்கள்? எமையெல்லாம் ஏங்கவிட்டு!

23.08.2008 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், தந்திகள், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்துக் கொண்டோருக்கும் பல வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். இன்று (22.09.2008) திங்கட்கிழமை அந்தியேட்டிக் கிரியைகள் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மலர்வு 21.10.1937
உதிர்வு 23.08.2008

இணுவில் மேற்கு. குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 வயதுப் பிரிவு கிரிக்கெட் சுற்றுப்போட்டி
# மனோஜின் அபார ஆட்டமும் பந்து வீச்சும் பற்றிக்ஸை தேசிய மட்டத்துக்கு உயர்த்தியது



வலிவடக்கு,செப்.22

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் வீரன் மனோஜ் ஆட்டமிழக்காது பெற்றுக்கொண்ட 58 ஓட்டமும் பந்து வீச்சில் ஆறு ஓட்டங்களைக் கொடுத்து 03 விக்கெட்டைக் கைப்பற்றியமையும் மன்னாரில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தது.

இலங்கையின் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பாடசாலை அணிகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம்பெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 09 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்று தேசிய மட்டத்திலான போட்டிகளில் விளையாட தகுதி பெற்றுள்ளது.

மன்னார் புனித சேவியர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மன்னார் புனித சேவியர் கல்லூரியும் மோதிக்கொண்டன.

பூவா,தலையா போட்டத்தில் வெற்றிபெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய புனித சேவியர் கல்லூரி 26.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 95 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

கமில்ரன் 26, பிரியகாந் 22, அரவிந்15 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்கள்.

மனோஜ் ஆறு ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் சஜீந்திரன் 18 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் சஞ்சீவ்ராஜ் 14 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் மிலாண்டோ 09 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

மிகக்குறைந்த இலக்கான 96 என்ற ஓட்ட எண்ணிக்கையை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 20 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

மனோஜ் 43 பந்துகளில் 12 நான்குகளுடன் ஆட்டமிழக்காது 58, மிலாண்டோ ஆட்டமிழக்காது 13, கமிஸ்ரன் 09 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள். 21 ஓட்டங்கள் உதரிகளாக பெறப்பட்டன.

அரவிந் 14 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார். (1-86)

# உடுவில் கோட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

வலி.வடக்கு, செப்.22

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்று வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

* ஏழாலை மகா வித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம்.
* கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம் எதிர் குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயம்.
* சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் இணுவில் இந்துக் கல்லூரி.

(1-86)

# மாகாணமட்ட தடளகப் போட்டி சுண்டுக்குளிக்கு 14 பதக்கங்கள்

யாழ்ப்பாணம், செப்.22

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையே அண்மையில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 9 தங்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் 4 வெண்கலப் பதக்கங்களையும் தனதாக்கிக் கொண்டது.

**11 வயதுப் பிரிவு**

* பிரியதர்ஷினி அருள்ஞானசுந்தரம் - நீளம் பாய்தல்- முதலாமிடம்,100 மீற்றர் ஓட்டம் - முதலாமிடம்.
* பிரியங்கா முருகையா - உயரம் பாய்தல் -இரண்டாம் இடம்

**13 வயதுப்பிரிவு**

* ஜோய் காருண்யா மகேந்திரன் - நீளம் பாய்தல் - முதலாமிடம், உயரம்பாய்தல் -முதலாமிடம், 100 மீற்றர் மூன்றாமிடம்.
* கஸ்தூரியா கணேஷமூர்த்தி -100 மீற்றர் - முதலாமிடம்.

**15 வயதுப் பிரிவு**

* றம்யா இரவீந்திரன் - 100 மீற்றர் தடை தாண்டல் - மூன்றாமிடம்

**17 வயதுப் பிரிவு**

* மதுரா தர்மராஜா - 100 மீற்றர் தடை தாண்டல் - முதலாமிடம்.

**19 வயதுப் பிரிவு**

கஜிதா விமலானந்தன் - உயரம்பாய்தல்- முதலாமிடம்,முப்பாய்சல் - முதலாமிடம், நீளம் பாய்தல் - மூன்றாமிடம்.

* சயந்திகா தேவகுமாரன் - முப்பாய்ச்சல் - மூன்றாமிடம்.

ஜோய் காருண்யா, பிரியதர்ஷினி என்போர் முறையே 13, 14 வயதுப் பிரிவுகளில் முதன்மை வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (1)

# தேசியமட்டக் கூடைப்பந்தாட்ட அணிக்கு இரு யாழ். வீராங்கனைகள் தெரிவு

வலி.வடக்கு, செப்.22

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் வித்தியாலயத்தைச் சேர்ந்த கூடைப்பந்தாட்ட வீராங்கனைகள் இருவர் தேசிய மட்ட அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் தேசியரீதியிலான பாடசாலை அணிகளுக்கு இடையேயான 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டிகள் நீர்கொழும்பில் இடம்பெற்றன.

இப்போட்டிகளில் யாழ.மாவட்டம், மாகாண மட்டத்தில் இடம்பெற்ற கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் வெற்றியீட்டிய புனித திருக்குடும்பக் கன்னியர் மடம் வித்தியாலய அணியும் கலந்து கொண்டது.

போட்டிகளில் இருந்து யாழ்ப்பாண திருக்குடும்பப் பாடசாலையைச் சேர்ந்த மொறின் ரூபினா, ரவி சனுஜா ஆகியோர் தேசிய மட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான தேசிய மட்டப் பயிற்சிகள் எதிர்வரும் தை மாதம் ஆரம்பமாகவுள்ளதாகவும் இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலைக்கு அறிவித்துள்ளது. (1-86)

# தென்மராட்சியில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செப்.22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் 14 வயது, 16 வயது , 18 வயது ஆகிய பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் விரைவில் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் தொடர்பான நிரல்கள் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் தாயாரிக்கப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன். அறித்துள்ளார். (1-207)

# சாதனை படைக்கும் வீரர், வீராங்கனைகள்



யாழ். திருக்குடும்ப கன்னியர்மட 19 வயதுக் குட்பட்ட கூடைப்பந்தாட்ட அணியினர் வவுனியாவில் இடம்பெற்ற மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியில் முத லாம் இடத்தைப் பெற்றுத் தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டனர். அணியினர் அதிபர், ஆசிரியர்களுடன். (1)



யாழ். பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சம்பியனான தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியினர் அதிபர், ஆசிரியர்களுடன்.

(படம்: நேசன்)



வடமாகாண மட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே இடம்பெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வடமாகாண சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.அணியினர் அதிபர், ஆசிரியர்களுடன்.

(படம்: நேசன்)

# சங்கானைக் கல்விக் கோட்டத்தில் விறுவிறுப்பாக நடைபெறும் போட்டிகள்

வலி.வடக்கு, செப்.22

சங்கானைக் கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வரு கின்றது.

சுற்றுப் போட்டியின் சில ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

* அராலி அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலைக்கும் சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்திற்கும் இடையேயான போட்டியில் அராலி கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை 01:00 என்ற கோலினால் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தை வெற்றி பெற்றது.
* வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கும் இடையேயான ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் சம நிலையில் முடிவடைந்ததைத் தொடர்ந்து வெற்றி தோல்வியை தீர் மானிப்பதற்கு வழங்கப்பட்ட சமநிலை உதைப்பு உதைகளை தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரி 07:06 என்ற கோல் கணக் கில் சரஸ்வதி மகா வித்தியாலயத்தை வெற்றி பெற்றது.
* அராலி அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற போட்டியில் அராலி அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை 01:00 என்ற கோல்க்கணக்கில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியை வெற்றி பெற்றது.

**16 வயதுப் பிரிவு**

* வட்டுக்கோட்டை மத்திய கல் லூரிக்கும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கும் இடையேயான போட்டியில் போட்டி சமநிலையில் வழங்கப்பட்ட வெற்றி தோல்வியை தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை உதைப்பு உதைகளை தொடர்ந்து வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி 03:01 என்ற கோல்க்கணக்கில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியை வெற்றி பெற்றது.
* அராலி அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலைக்கும் அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலைக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் அராலி கிழக்கு அமெரிக்கன் [illegible] பாடசாலை 01:[illegible] அராலி வள்ளியம்மை ஞாபகார்த்தப் பாடசாலையை வெற்றிபெற்றது.
* அராலி இந்துக் கல்லூரிக்கும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் அராலி இந்துக் கல்லூரி 03:00 என்ற கோல் கணக்கில் அராலி சரஸ்வதி மகா வித்தி யாலயத்தை வெற்றிபெற்றது.

**18வயதுப் பிரிவு**

* அராலி இந்துக் கல்லூரிக்கும் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களை பெற்று சம நிலையை ஆட்டம் நிறைவு பெற்றது. வெற்றி தோல்வியை தீர்மானிக்க வழங்கப் பட்ட சமநிலை உதைப்பு உதைகளை தொடர்ந்து வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி 05:03 என்ற கோல் கணக்கில் அராலி இந்துக் கல்லூரியை வெற்றி பெற்றது.
* வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கும் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்திற்கும் இடையே இடம் பெற்ற போட்டியில் வட்டுக்கோட்டை [illegible]2:00 என்ற கோல் கணக் [illegible]பெற்றது. (1-86)

# விளையாட்டு அரங்குகளில்

## நாளைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, செப்.22

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற 14, 16, 18 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

* அராலி கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

**16 வயதுப் பிரிவு**

* அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் எதிர் அராலி இந்துக் கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

* வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி எதிர் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி. (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)
# கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான
# அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்குக் கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள், இதற்கு அமைய யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997.02.17ஆம் திகதிய 963/1 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
- கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொகு (¼) பங்கினர் அல்லது 25பேர் அதில் எதுகுறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச் சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இவர்களுள் ஆகக் குறைந்தது இருவராவது (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன் மொழிவுகள் (09) பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன், சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.
- தகுதியுள்ள கிளைப் பொதுச்சபை அங்கத்தவர்களுக்கு கிளைக்குழுத் தெரிவு தொடர்பான அறிவித்தல்கள் தனித்தனியாக அனுப்பி வைக்கப்படுகின்றன. இவ்வறிவித்தல்கள் கிடைக்கப்பெறாத எவரேனும் தகுதியுள்ள அங்கத்தவர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொண்டு இக்கிளைப் பொதுச்சபை நடைபெறும் திகதிகளில் தங்களுக்குரிய கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து கிளைக்குழுவைத் தெரிவு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

## கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்

கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் 27.09.2008ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி

| தொ. இல. | கிளை. இல. | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | திகதி | நேரம் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | 03 | சித்தன்கேணி | திருமதி பா.கலைச்செல்வி | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | யா/ஸ்ரீ கணேசா வித்தியாலயம் சித்தன்கேணி |
| 02. | 04 | பனிப்புலம் | திரு க.கமலநாதன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 04 பனிப்புலம் கிளைக்கட்டடம் |
| 03. | 05 | பண்ணாகம் | திரு அ.யேம்ஸ்மேஷன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 05 பண்ணாகம் கிளைக்கட்டடம் |
| 04. | 06 | சுழிபுரம் வட கிழக்கு | திரு க.திசாகரன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 06 சுழிபுரம் வட கிழக்கு கிளைக்கட்டடம் |
| 05. | 07 | சுழிபுரம் மத்தி | திரு சி.சண்முகநாதன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 07 சுழிபுரம் மத்தி கிளைக்கட்டடம் |
| 06. | 08 | சுழிபுரம் குகன் | திரு இ.பாலச்சந்திரன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கலைமகள் சனசமூக நிலையம் சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் |
| 07. | 09 | சுழிபுரம் மேற்கு | திரு ரி.என்.ராஜா | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | பாரதி கலைமன்றம் சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் |
| 08. | 10 | பொன்னாலை | திரு பா.சிறிக்குமார் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | மூளாய் இந்து இளைஞர் மன்றம் சுழிபுரம் |
| 09. | 11 | மூளாய் | திரு க.சசிகரன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 11 மூளாய் கிளைக்கட்டடம் |
| 10. | 12 | தொல்புரம் | திரு அ.விமல்ராஜ் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 12 தொல்புரம் கிளைக்கட்டடம் |
| 11. | 12A | நெல்லியான் | திரு இ.விஜயமோகனராஜா | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 12 தொல்புரம் கிளைக்கட்டடம் |
| 12. | 14 | தொல்புரம் மத்தி | திரு தி.வித்தககலாநிதி | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | தொல்புரம் மத்தி சனசமூக நிலையம், சுழிபுரம் |
| 13. | 15 | தொல்புரம் கிழக்கு | திரு சி.குணாளன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | விக்னேஸ்வரா சனசமூக நிலையம் தொல்.கிழ. சுழிபுரம் |
| 14. | 16 | வட்டுபிளவத்தை | திரு வே.பிரதீஸ்குமார் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கற்பகச்சோலை சனசமூக நிலையம் வட்டு, வட.சித்தன்கேணி |
| 15. | 17 | வட்டு சிவன் | திருமதி க.நல்லதம்பி | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 17 வட்டு சிவன் கிளைக்கட்டடம் |
| 16. | 18 | வட்டு கிழக்கு | திரு பொ.மகேஸ்வரன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 18 வட்டு கிழக்கு கிளைக்கட்டடம் |
| 17. | 19 | வட்டு மூளாய் | திரு பா.சிவபாலன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 19 வட்டு மூளாய் கிளைக்கட்டடம் |
| 18. | 20 | வட்டு மேற்கு | திருமதி அ.ஜெகநாதன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 20 வட்டு மேற்கு கிளைக்கட்டடம் |
| 19. | 21 | வட்டுக்கோட்டை | திரு வை.கைலைநாதன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 21 வட்டுக்கோட்டைக் கிளைக்கட்டடம் |
| 20. | 22 | அராலி மேற்கு வடக்கு | திரு அ.தயாளன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 22அராலி மேற்கு வடக்கு கிளைக்கட்டடம் |
| 21. | 23 | அராலி வடக்கு | திரு அ.சீராளன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | யா/அராலி வடக்கு அ.மி.த.க.பாடசாலை வட்டுக்கோட்டை |
| 22. | 24 | அராலி தெற்கு கிழக்கு | திரு சு.கணேசு | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 24 அராலி தெற்கு கிழக்கு கிளைக்கட்டடம் |
| 23. | 25 | அராலி விக்னேஸ்வரா | திரு ச.சசீந்திரன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிராம அபிவிருத்திச் சங்கம் அராலி தெற்கு, வட்டுக்கோட்டை |
| 24. | 26 | அராலி ஐயனார் | திரு சி.சிறீதரன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கலைமகள் சனசமூக நிலையம் அராலி கிழ. வட்டுக்கோட்டை |
| 25. | 27 | செட்டியாமடம் | திருமதி ஞா.ஜெயாமேரிகொன்சி | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | அராலி வடக்கு சனசமூகநிலையம் வட்டுக்கோட்டை |
| 26. | 28 | துணவி | திரு.த.செல்வசோதி | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | யா/சின்னம்மா வித்தியாலயம் சங்கரத்தை வட்டுக்கோட்டை |
| 27. | 29 | சங்கரத்தை துணவி | திரு வி.சிவகுமார் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | யா/சின்னம்மா வித்தியாலயம் சங்கரத்தை வட்டுக்கோட்டை |
| 28. | 30 | சங்கானை கிழக்கு மத்தி | திரு ஐ.நாகேஸ்வரன் | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 30 சங்கானை கிழக்கு மத்தி கிளைக்கட்டடம் |
| 29. | 31 | நிற்சாமம் | திரு ந.பத்மசோதி | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | அமுதசுரபி மண்டபம் நிற்சாமம் சங்கானை |
| 30. | 32 | சிலம்புப்புளியடி | திருமதி க.சித்திரகுமாரி | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 32 சிலம்புப்புளியடி, கிளைக்கட்டடம் |
| 31. | 33 | சங்கானை கிழக்கு | திருமதி சு.தாட்சாயினி | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 32 சிலம்புப்புளியடி, கிளைக்கட்டடம் |
| 32. | 34 | தொல்புரம் மேற்கு | செல்வி சி.சிவயோகினி | 27.09.2008 | சனிக்கிழமை 10.00 | கிளை 34 தொல்புரம் மேற்கு கிளைக்கட்டடம் |

*முக்கிய குறிப்பு:* வாக்களிக்கத் தகுதியுள்ள சகல உறுப்பினர்களுக்கும் அறிவித்தல் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்கப் பெறாதவர்களும் இவ்வறிவித்தலைத் தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஒப்பம்: பொ.சிவலிங்கம்,
சக.அ.உ.ஆணையாளர்,

கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.19.09.2008 (554749)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1021 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

துலாம் 16 18 27 41

19-09-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 500042134 - 500063815

ஜக்பொட் பரிசு ரூபா. 3,079,200/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 234,387 | 20/- | 4,687,740/- |
| 2 இலக்கங்கள் | 21,560 | 40/- | 862,400/- |
| 1 இல. + லக்கினம் | 21,310 | 60/- | 1,278,600/- |
| 2 இல. + லக்கினம் | 1,938 | 200/- | 387,600/- |
| 3 இலக்கங்கள் | 569 | 1000/- | 569,000/- |
| 3 இல. + லக்கினம் | 54 | 10,000/- | 540,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,079,200/- | - |
| மொத்தம் | | | 8,925,340/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை | 279,826 | | 9,425,340/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,126,100/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 500063807-7-20 |
| கம்பஹா | 500062192-1-01 |
| களுத்துறை | 500059098-7-31 |
| மாத்தறை | 500044026-3-33 |
| கண்டி | 500048092-0-30 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


# கண்ணீர் அஞ்சலி

## கணபதிப்பிள்ளை புவனேசலிங்கம்

(முன்னாள் பிரதம காசாளர்- பண்டத்தரிப்பு, பரிஷ் ப.நோ.கூ.சங்கம்)



எமது சங்கத்தின் ஆரம்பகால பணியாளர்களில் ஒருவராக சங்கத்தில் கடமையாற்றி சகலருடனும் நட்புறவோடு பழகி எல்லோராலும் தோழர் என அழைக்கப்பட்ட கணபதிப்பிள்ளை புவனேசலிங்கம் அவர்கள் சங்கத்தில் பாரிய பொறுப்புள்ள பதவியை கடமை உணர்வோடு செய்து சகலரது பாராட்டையும் பெற்றவர் ஆவார். அவருடன் பழகிய நாள்கள் என்றும் மறக்க முடியாதவையாகும். இச்சந்தர்ப்பத்தில் இவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறையருள் வேண்டிப் பிரார்த்திப்போமாக.

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்க பணியாளர்கள்,
சிக்.சேமி.கடனுத.கூட்.சங்கம்.

அங்கத்தவர்கள்.

(சி/554748)

# நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
# நிறுவுநர் நினைவு நாள் 22.09.2008

மண் உலகில் 27 . 08 . 1887



நினைவலையில் 22 . 09 . 1961

## அமரர் முகாந்திரம் முதலியார் அத்தியார் அருணாசலம் J.P.

"வித்யா ஜோதி நித்திய சுவர்க்கம்"

"விழி தந்து மொழி தந்து
ஒளி தந்த அமரத்துவ ஜோதிக்கு
ஆத்ம புஷ்பங்கள் ஆயிரங்கோடி சமர்ப்பணம்"

அத்தியார் இந்துக் கல்லூரி நிறுவுநர் அமரர் முகாந்திரம் முதலியார் அத்தியார் அருணாசலம்J.P.புரவலர் பெருமகனாரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

நினைவு

வம்சக் கொடிகள்:
திருமதி. சி.பாலசுப்பிரமணியம், திரு திருமதி. ந.சிவகுமாரன்.

(சி/554741)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# அரசுக்குத் தலையிடி தரும் நான்கு வழக்குகள் இன்று

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசிற்கு அரசியல் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் தலையிடி தரக்கூடிய முக்கிய நான்கு வழக்குகள் இன்று ஒரே நாளில் - அடுத்தடுத்து - உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன.

அவற்றில் ஒரு வழக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே எதிர்மனுதாரராகக் குறிப்பிடப்பட்டு அவருக்கும் நீதிமன்ற அழைப்பாணை விடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல், நீதித்துறை, பொலிஸ்துறை, பொதுநிர்வாகம் போன்ற முக்கிய துறைகளின் நியாயமான செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கான சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்கும் அதிகாரமுடையதாக அரசமைப்புக் கவுன்ஸில் ஒன்றை உருவாக்குவதற்கு வழிசெய்யும் அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் பற்றிய சர்ச்சை தொடர்பான வழக்கு இவற்றில் ஒன்று.

இந்த அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டு நான்கு, ஐந்து ஆண்டுகளாகியும் இன்னும் அரசமைப்புக் கவுன்ஸிலை ஸ்தாபிக்காமல் ஜனாதிபதி இழுத்தடித்து வருகின்றமையை ஆட்சேபித்து இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரசமைப்பின்படி ஜனாதிபதி ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட முடியாது என்பதால், இவ்வழக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெயரை எதிர்மனுதாரராகக் குறிப்பிடுவதையும், அவருக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்படுவதையும் அரசுத் தரப்பு கடந்த தவணையின்போது நீதிமன்றில் ஆட்சேபித்திருந்தது.

அந்த ஆட்சேபனையைப் புறம்தள்ளிய பிரதம நீதியரசர் உட்பட்ட உயர்நீதிமன்ற ஆயம், ''நாட்டில் எவருமே சட்டத்துக்கு மேற்பட்டவர்கள் அல்லர்'' என்று குறிப்பிட்டு, ஜனாதிபதிக்கும் அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. தற்போதைய அரசமைப்பின் கீழ் ஜனாதிபதி ஒருவருக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இதேசமயம், அரச ஊழியர்களின் பதவிக்காலத்தை அவர்களது ஓய்வுபெறும் அறுபது வயது கால எல்லைக்குப் பின்னரும் நீடிக்க வழிசெய்யும் விதத்தில் தமக்கு அதிகாரமளிக்கும் உத்தரவை வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதி வெளியிட்டிருக்கின்றமையை ஆட்சேபித்து மாற்றுக் கொள்கைக்கான மையம் தாக்கல் செய்திருக்கும் அடிப்படை உரிமை மீறல் மனுவும் இன்று உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது.

இந்த வர்த்தமானி அறிவித்தலின் கீழான அதிகாரத்தைப் பிரயோகித்தே தற்போதைய சட்டமா அதிபர் ஸி.ஆர்.டி. சில்வாவின் பதவிக்காலத்தைக் கடந்த மாதம் ஜனாதிபதி நீடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேநேரம், அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் ஒருவரை 90 நாள்கள் வரை தடுத்து வைத்திருப்பதற்கான தமது அதிகாரத்தைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் 18 மாதங்கள் வரை நீடித்துப் பயன்படுத்துவதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு வழக்கும் இன்று நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு மீண்டும் எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

இதே சந்தர்ப்பத்தில், கொழும்பில் தமிழர்கள் இம்சைக்கு உட்படுத்தப்படுவதை ஆட்சேபித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தாக்கல் செய்திருக்கும் அடிப்படை உரிமை மீறல் மனுவும் இன்று மீண்டும் உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு வருகின்றது.

கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் தமிழர்கள் வகை, தொகையின்றிக் கைது செய்யப்படுவதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்த மனுவை ஏற்கனவே பரிவோடு பரிசீலித்திருந்த உயர்நீதிமன்றம், இவ்விவகாரத்தை ஒட்டி பொலிஸ்மா அதிபருக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும், சட்டமா அதிபருக்கும் தெளிவான சில அறிவுறுத்தல்களை வெளியிட்டிருந்தது.

அரசு சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டமா அதிபரின் பிரதிநிதி, உயர்நீதிமன்றின் அந்த அறிவுறுத்தல்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதியளித்திருக்கும் பின்னணியில் -

அந்த உத்தரவுக்கு முற்றிலும் மாறான விதத்தில் தமிழர்களைப் பொலிஸ் பதிவு என்ற பெயரில் இம்சைக்கு உள்ளாக்கும் வேறு நடவடிக்கைகள் கொழும்பு பொலிஸ் நிலையங்களிலும், பொலிஸின் சார்பில் அமைக்கப்பட்ட உப மையங்களிலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை அரங்கேறியிருக்கின்றன.

இந்தச் சூழலில்தான் இந்த நான்கு வழக்குகளும் இன்று நீதிமன்றில் மீண்டும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன.

இதற்கிடையில், வெள்ளைவான் மர்ம நபர்களால் கடத்தப்பட்டவர் என்று கூறப்படும் மலையகப் பகுதித் தமிழர் ஒருவர் பின்னர் பொலிஸ் காவலில் இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டிருப்பது தொடர்பான சத்தியக் கடதாசி ஒன்றும் இந்த வழக்குகளில் ஒன்று சம்பந்தமாக இன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருப்பதாகவும் அறியவருகின்றது.

வடக்கு, கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து மேல்மாகாணத்துக்கு வந்துள்ள தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக ஆங்கில வார இதழ் ஒன்றுக்குப் பேட்டியளித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ''இது ஒரு தீவிரமான பிரச்சினை. இதில் சிக்கல் என்னவென்றால் - பெரும்பாலான இந்த அரசியல்வாதிகள், சில சிவிலியன்கள் அல்லது நீதிபதிகளாக இருக்கலாம், அவர்களுக்கு இதில் உள்ள பாதுகாப்பு விடயங்கள் விளங்குவதேயில்லை என்பதுதான்'' - என்று விசனத்துடன் கூறியிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

''பாதுகாப்பு விவகாரங்களில் உள்ள சிக்கல்கள் நீதிபதிகளுக்குப் புரிவதேயில்லை'' - என்ற சாரப்பட்ட கோத்தபாயவின் கருத்துக்கு தென்னிலங்கையில் முக்கிய பரப்புரை வழங்கப்பட்டுள்ள புறச்சூழலில் இந்த வழக்குகள் நீதிமன்றுக்கு வருவதால் அவற்றின் போக்கு புதிய திருப்பங்களைத் தரலாம் என்று எதிர்பார்க்க முடியும்.







நேற்று குடாநாட்டின் சகல கத்தோலிக்க ஆலயங்களிலிருந்தும் சமாதானப் பேரணி நடத்தப்பட்டது.
அதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் சமாதானம் வேண்டித் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.
(படங்கள்: லக்ஸ்மன், நேசன்)

# எமது மக்களின் துயர் நீக்குவதற்கு உடனடியாக சமாதானம் வேண்டும்

## அருட்தந்தை ஜெயசேகரம் வலியுறுத்து



யாழ்ப்பாணம், செப்.22

துன்பியலுக்குள் சிக்குண்டு தவித்து வாடும் எமது மக்களின் துயர் நீக்க சகலரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். சமாதானமே இதற்கு சிறந்த வழி. இந்தச் சமாதானம் உடனடியாக ஏற்பட வேண்டும். அதற்கு இறைவனிடம் அபயக்குரல் எழுப்புவதாக இப்பேரணி இடம்பெற்றது.

நீதி சமாதானத்திற்கான ஆணையத்தைச் சேர்ந்த அருட்திரு.எஸ்.ஜெயசேகரம் அடிகளார் இக்கருத்தைத் தெரிவித்தார்.

நீதி சமாதானத்துக்கான யாழ்.மறை மாவட்ட ஆணையம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் நிரந்தர சமாதானமும் வேண்டி நேற்றுக் காலை செபமாலைப் பேரணியை நடத்தியது.

யாழ்.மறைமாவட்டத்தின் அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களில் இருந்தும் காலையில் ஆரம்பிக்கப்பட்ட செபமாலைப் பேரணி மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தைப் பல்வேறு பாதைகளூடாகச் சென்றடைந்தது.

இப்பேரணியில் பெருந்திரளான- ஆயிரக்கணக்கான மக்கள் பக்தி பூர்வமாகக் கலந்துகொண்டனர்.

பேரணி குறித்து கருத்துத் தெரிவித்த நீதி சமாதானத்திற்கான ஆணையத்தைச் சேர்ந்த அருட்திரு.எஸ்.ஜெயசேகரம் அடிகளார் மேலும் தெரிவித்ததாவது:

பலம் வாய்ந்த சக்திகளின் கூட்டுச் சக்தி உருவாக மக்களை ஒன்று திரட்டி வன்முறைகளுக்கு எதிரான ஒரு கூட்டு சக்தியாக இந்த செபமாலைப் பேரணி இடம்பெறுகிறது. வன்செயலுக்கு எதிரான பலத்தின் கூட்டுச் சக்திகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பது எமது விருப்பம். யாராக இருந்தாலும் துன்பியலுக்குட்பட்ட மக்கள் அனுபவிக்கும் துயர்கள் நீங்க செயற்பட வேண்டும்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பேடினன் மார்கோஸின் ஆட்சித் துன்பத்தை எதிர்த்து செபமாலைப் பேரணி இடம்பெற்றது. பொதுவாக கத்தோலிக்க நாடுகளில் வன்முறைகளைக் களைதற் பொருட்டு இது போன்ற செபமாலைப் பேரணிகள் நடைபெறுவதுண்டு.

எமது மறைமாவட்டத்திலுள்ள பங்குகள் அனைத்தும் பேரணியில் பங்குபற்றியன. இது சமாதானத்தின் குரலாக ஒலிக்கின்றது- என்றார்.

(202-111)

# மலர்வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

வலி.வடக்கு, செப்.22

தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியின் வெள்ளி விழா மலர் வெளியீட்டு விழாவும், பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாயக் கிழமை காலை 9மணிக்கு அதிபர் க. காராளசிங்கம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் வலிகாமம் கல்வி வயல கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வெள்ளி விழா மலரினை வெயிட்டு வைப்பார். முதற்பிரதியை பழைய மாணவர் சங்க உப தலைவர் ஆ.ஜெனார்தனன் பெற்றுக் கொள்வார்.

நூலின் மதிப்பீட்டுரையை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிபாளர் செல்வி விமலாவதி கந்தையா நிகழ்த்துவார்.

சிறப்பு விருந்தினராகத் தெல்லிப்பழை கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும், கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் மு. சொர்ணலிங்கமும் கலந்து கொள்வர்.

(202-86)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 07 | 23.09.2008 செவ்வாய்க்கிழமை |
| திதி: | நவமி மு.இ. 09.34வரை |
| நட்சத்திரம் : | திருவாதிரை பி.ப. 01.49 வரை |
| சுபநேரம் : | 10.33 - 12.02 |
| ராகுகாலம் : | 03.02 - 04.32 |

# இலங்கையில் ஆயிரத்து 17 பேர் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம்,செப்.22

இலங்கையில் உள்ள 26 மாவட்டங்களிலும் சுமார் ஆயிரத்துப் பதினேழு பேர் காசநோயினால் பாதிப்புக்குள் ளாகி சிகிச்சைபெற்று வருகிறார்கள்.

கொழும்பு தேசிய காசநோய் கட்டுப்பாட்டு நிலையம் 2008 ஒகஸ்ட் மாதம் திரட்டிய புள்ளிவிவரம் மூலம் இந்நோயாளர் விவரம் அறியப்பட்டுள்ளது.

இப்புள்ளி விவரங்களின்படி கண்டி மாவட்டத்தில் 237 பேரும், கொழும்பு மாவட்டத்தில் 174 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 154 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 128 பேரும், அனுராதபுர மாவட்டத்தில் 58 பேரும், குருநாகல மாவட்டத்தில் 51 பேரும், கேகாலை மாவட்டத்தில் 34 பேரும், யாழ்.மாவட்டத்தில் 31 பேரும்-

பதுளை மாவட்டத்தில் 27 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 24 பேரும், மாத்தறை மாவட்டத்தில் 23 பேரும், மாத்தளை மாவட்டத்தில்15 பேரும், கல்முனை மாவட்டத்தில் 14 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 13 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில்11 பேரும்,

அப்பாறை மாவட்டத்தில் 09 பேரும், பொலனறுவை மாவட்டத்தில் 08 பேரும், வவுனியா மாவட்டத்தில் 03 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 02 பேரும் மொனராகல மாவட்டத்தில் ஒருவரும்காச நோயாளர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலி, மன்னார், கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய ஆறு மாவட்டங்களில் காசநோயாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை எனவும் இப்புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. (202-300)

# கரவெட்டியில் தனிமையில் இருந்த மூதாட்டியைப் பயமுறுத்திக் கொள்ளை

மந்திகை, செப்.22

கரவெட்டியில் தனிமையில் வசித்து வந்த மூதாட்டியைக் கத்திமுனையில் பயமுறுத்தி நகைகளும் பெறுமதியான பொருள்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

சுமார்2லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள், கையடக்கத் தொலைபேசி என்பனவற்றை கொள்ளையடித்த ஆயுதங்களுடனான முகமூடிக் கொள்ளைக் கோஷ்டி அவ்வீட்டில் கத்தி, பொல்லு என்பனவற்றை விட்டுச் சென்றுள்ளது.

இக்கத்தி, பொல்லு என்பன நெல்லியடிப் பொலீஸாரினால் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் பற்றித் தெரியவந்துள்ளதாவது:

கடந்த திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் நவிண்டிலைச் சேர்ந்த மூதாட்டி ஒருவரின் வீட்டை உடைத்துக் கொண்டு முகமூடியணிந்த கொள்ளைக்கோஷ்ட ஒன்று ஆயுதங்கள் சகிதம் உள்ளே புகுந்ததுள்ளது.

கத்திமுனையில் மூதாட்டியைப் பயமுறுத்தி காதில் அவர் அணிந்திருந்த தோடுகளை கழற்றி பின் வீட்டில் சல்லடைத் தேடுதல்களை மேற்கொண்டது. அப்போது அங்கிருந்த தங்கச் சங்கிலி, காப்பு, கையடக்கத் தொலைபேசி என்பனவற்றைக் கொள்ளைடித்துச் சென்றுள்ளது.

இக்கொள்ளை பற்றிய விசாரணைகளை மேற்கொண்ட பொலீஸார் கொள்ளையர்களினால் விட்டுச் செல்லப்பட்ட கத்தி, பொல்லு என்பனவற்றை வீட்டில் மீட்டனர். பொலீஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(202-218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்



எமது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களின் இடமாற்றத்தினை நிறுத்துவதற்கு உதவிய யாழ்.மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி இணைப்பாளர் திரு. S.A.உதயன் அவர்களுக்கும், சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ **திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும் எமது அதிபர் சங்கம் சார்பில் நன்றிகளைத் தெரிவித்து வாழ்த்துகிறோம்.

**அதிபர் சங்கம்,**
**சங்கானைக் கல்விக் கோட்டம்,**
வலிகாமம்.

(78627)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



கைதடி மேற்கு, உதயநகர் அண்ணமார் ஆலய புனரமைப்புக்கு நிதியுதவியளித்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ *K.N.* **டக்ளஸ் தேவானந்தா** அவர்களையும் அவர் சார்ந்த உறுப்பினர்களையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உதயநகர்,
கைதடி மேற்கு. (78646)

**பரிபாலனசபை,**
**அண்ணமார் ஆலயம்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற அங்கத்தவரான சாவகச்சேரி செல்வராஜா வெற்றிலைக் கடை உரிமையாளர்

**அருளம்பலம் செல்வராஜா**

20.09.2008 அன்று காலமானார். அவர்களின் மறைவுக்கு எமது மன்றம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

## பாலன் மில்ஸ்

தேங்காய் கொப்பறா, இலுப்பைப்பருப்பு, எள் போன்றவற்றை 3 கிலோவில் இருந்து 1000 கிலோ வரை உடன் எண்ணெயாக ஊற்றிப் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் *No.1 R.S.T.* மார்க் தேங்காய் எண்ணெயும் பெற்றுக் கொள்ளலாம். கிறைன் டிங் மில் அனுபவமுள்ள வேலை ஆள் தேவை.

**பாலன் மில்ஸ்,**
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.

## கணனி வகுப்புகள்

*MS Office, Desk Top Publishing, Internet Technology, Accounting Package, Hardware Technology, Auto CAD* போன்ற டிப்ளோமா கற்கைநெறிகளும் *Certificate in Internet & E-Mail, Certificate of web designing.*

தரம் 3 முதல் 8 வரையான மாணவர்களுக்கு *KIDS Program* சிறுவர்களுக்கான பயிற்சிநெறி

*Dip.in ICT (Gr. - 10&11) GIT (Gr.-12)*

தொழில் புரிபவர்களுக்கான விஷேட வகுப்புகள் சனி, ஞாயிறு முழு நேரமும் கிழமை நாள்களில் 5 - 6 மணிவரையும் நடைபெறுகின்றது. குறைந்த கட்டணத்தில் தீர்மான சேவைகள்.

**STR COMPUTER SYSTEM**
**384, Navalar Rd., Nallur, Jaffna**
**TP: 021-4590775**

### மீள ஆரம்பம்

சரசாலை இந்து மன்ற அறநெறிப் பாடசாலை யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு பீடாதிபதி பேராசிரியர் க. கந்தசாமியால் மீள ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி வைபவம் அதிபர் திருமதி சு.தயாபரன்தலைமையில் நடைபெற்றன.

## பாராட்டி நன்றி கூறுகின்றோம்



யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற எமது மகன் செல்வன்

**தர்மலிங்கம் பாசுபதன்**

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 176 புள்ளிகளைப் பெற்று தமிழ்மொழி மூல மாணவர்களில் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற ஆக்கமும் ஊக்கமும் அளித்த அவரது பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும், தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பானவர்களையும், எல்லாவற்றிற்கும் மேலாக வழிகாட்டிய மீசாலை நியூமற்ஸ் அக்கடமி ஆசிரியரான திரு.க.தவயோகராசா ஆசிரியர் அவர்களையும் பாராட்டி மனமார்ந்த நன்றிகளைக் கூறுவதுடன் எமது மகன் சித்தியடைந்த செய்தியை வானொலி மூலம் அறிந்தவுடன் வந்து வாழ்த்துக்களையும், பரிசில்களையும் வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

கண்டி வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

மாணவனின் பெற்றோர்
**திரு.திருமதி தர்மலிங்கம்.**

## முதலாமாண்டு நினைவலைகள்



திருமதி

**சரோஜினி புவனேந்திரன்**

தோற்றம் 03.12.1944 — மறைவு 04.10.2007

திதி:நவமி

*எங்கள் கடவுள் நீ அம்மா*
*எங்கள் உயிர் நீ அம்மா*
*எங்கள் ஆசான் நீ அம்மா*
*என்றும் எங்கள் அன்பு உனக்கே அம்மா*
*ஓராண்டு சென்றாலும் எங்களுடன் நீ அம்மா*
*என்றும் உன் நினைவுடன் நாம் அம்மா*

உன் துயரால்:
**கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

மாலுசந்தி, அல்வாய்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தனபாக்கியவதி நடராசா *(பராசக்தி)*

இல.43/1, மணல்தறை வீதி, கந்தர்மடத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாக்கியவதி நடராசா (20.09.2008) சனிக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சோ.நடராசா *(S.K)* அவர்களின் பாசமிகு மனைவியும் மதிவதனசேகரன் (மதி), இந்திராவதி (மணி), வரதசேகரன் (வரதன்) ஆகியோரின் அருமைத் தாயும் கெங்காதரதேவி, காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கனகா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான நடராசா, நாகரத்தினம், கணேசன், சின்னராசா, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.09.2008) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.43, மணல்தறை வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (78651)

தகவல்:
**சோ.சிவநாயகம்** *(பெறாமகன்).*

### கோசலாராணி திரிலோகஈஸ்வரா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோசலாராணி திரிலோகஸ்வரா 19.09.2008 வெள்ளிக்கிழமை திருகோணமலையில் அகாலமரணமானார்.

அன்னார் நீர்ப்பாசன திணைக்களம் (வடக்கு) திருகோணமலையில் கடமைபுரியும் படவரைகூட உதவியாளர் *(DOA)* ஆறுமுகம் திருலோகஈஸ்வராவின் அன்பு மனைவியும் துவாரகனின் (பொறியியலாளர், சிங்கப்பூர்) அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் புஷ்பராணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் திருமதி இந்திராணி பத்மநாதன் (கொழும்பு), உருத்திரா (லண்டன்), திருமதி ஹேமாராணி பாஸ்கரன் (லண்டன்), ஜீவேந்திரா (லண்டன்), செல்வி பூமாராணி (கல்முனை), புஸ்பேந்திரா (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.09.2008) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் 23/4, விகாரை வீதியில் அமைந்துள்ள நீர்ப்பாசன விடுதியிலிருந்து நல்லடக்கத்திற்காக திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.24, பூநாடி ஒழுங்கை,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*
*தொ.பே. 0714 - 810305* (78649)

தகவல்:
**மருமக்கள்.**

# Provision of Cleaning Services to the Hospitals and Institutes coming under the Ministry of Healthcare and Nutrition

## Bid Notice

*1. Sealed bids are invited by the Chairman, Procurement Committee ministry of Healthcare and Nutrition from registered institutes having following qualifications for the provision of cleaning services for the hospitals and institutes coming under the ministry of Healthcare and Nutrition.*

**Basic Qualifications**

*I. Should be an institute having business registration for provision of cleaning services.*

*II. Should have experience for the past 3 years regarding cleaning services in a Government Hospital or a reputed institute.*

*III. Should furnish documentary evidence to prove that contribution are made on behalf of not less than 150 employees in the name of the institute at least for the past 6 months.*

*IV. Should have completed a cleaning service worth more than Rs.700,000.00 per annum in a Government Hospital or a reputed institute for the 02 years of 2006 - 2007 and this should be proven with letters obtained from the relevant institutes.*

*2. All bid documents should be the ones issued by this ministry and should be handed over having completed and signed without making any deletions. Bid applications which are unclear incomplete or which are not in compliance with the condition will be rejected.*

*3. The relevant bid applications and details should be obtained from room No.149 of the division of the Senior Assistant Secretary (Procurement) of the Ministry of Healthcare and Nutrition, Suwasiripaya, 385, Ven. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10 between 9.00 a.m.to 2.00 p.m upto 08.10.2008 on payment of non refundable fee of Rs. 2000.00 in cash for each bid application. (The original receipt for the payment of cash should be affixxed with bid application).*

*Following documents should be furnished to obtain bid applications.*

1. *Certificate of business registration*
2. *A worth certificate on Gen. 170 form obtained from the Divisional Secretary within 6 months (value: Rs.500,000/= for each institute)*

*4. Completed bids could be deposited in the tender box provided at the office of the Senior Assistant Secretary (Procurement) or sent by registered post to the Chairman, Procurement Committe C Ministry of Healthcare and Nutrition, Suwasiripaya, 385, Ven Baddegama Wimalawansa Thero Mawathe, Colombo 10 to receive before 10.00 a.m on 9th October 2008.*

**Institutes / Hospitals**
**Teaching Hospital, Jaffna**

*5. Bids submitted for the provision of cleaning services to the above mentioned institues coming under the Ministry of Health should be submitted separately for each institute*

*6. Bid documents should be submitted in duplicate enclosed in two separate envelopes marked the original and the duplicate again enclosed in one envelope.*

*7. Name of the relevant institute and "Quotations for the Provision of Cleaning Services 2008 - 2009" should be marked on the top left hand corner of the envelope enclosing the bid applications and the other relevant details should be sealed.*

*8. Bids will be opened immediately after closing and the bidder or his authorized representative may be present on the occasion, for further details please contact the Senior Assistant Secretary (Procurement) of the ministry of health (Telephone number 011 2672046).*

**Chairman**
**Ministerial Procurement committee 'C'**
**Ministry of Healthcare and Nutrition**
**"Suwasiripaya"**
**Colombo 10**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்.பிரதமர் அலுவலகம் அருகே தற்கொலைத் தாக்குதல்; 61 பேர் பலி! டென்மார்க் தூதுவர் உட்பட ராஜதந்திரிகள் காயம்!!

இஸ்லாமாபாத்,செப்.22

பாகிஸ்தான் பிரதமரின் செயலகத்துக்கு அருகிலுள்ள நட்சத்திர ஹோட்டலில் தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் சனிக்கிழமை மேற்கொண்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 61 பேர் பலியாயினர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். ஹோட்டலின் ஒரு பகுதி தீக்கிரை யானது.

மேரியட் என்னும் இந்த ஐந்து நட்சத்திர ஆடம்பர ஹோட்டல், தலைநகரான இஸ்லாமாபாத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்துள்ளது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், தூதரக அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் அதிகளவில் தங்கும் இந்த ஹோட்டல், 290 அறைகளைக் கொண்டது.

குண்டு வெடிப்புக்கு முன்னால் பெரிய ''ட்ரக்'' ஒன்று ஹோட்டலை நோக்கி வந்துகொண்டிருந்தது. அதேவேளை விரைந்து வந்த காரொன்று திடீரென ஹோட்டலின் முன்புற ''கேற்'' மீது மோதியது. அப்போது பயங்கர ஓசையுடன் காருக்குள்ளிருந்து குண்டுகள் வெடித்தன. அக்கார் சின்னாபின்னமாகச் சிதறியது. சிதைவுகள் ஆங்காங்கு எரிந்து கொண்டிருந்தன என நேரில் கண்டவர்கள் கூறினார்கள்.

குண்டுகள் பயங்கரமாக வெடித்துச் சிதறிய சத்தம் பல மைல் தூரம்வரை கேட்டது. அருகிலுள்ள கட்டடத்தின் கண்ணாடி ஜன்னல்களும், கதவுகளும் நொறுங்கி விழுந்தன. அப்பகுதியை கரும்புகை மண்டலம் மறைத்தது. குண்டுகள் வெடித்த இடத்தில் 20 அடி அகல பாரிய பள்ளமொன்று ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

குண்டு வெடிப்புகளால் எழுந்த தீப்பிழம்புகள் உக்கிரமாக பரவத்தொடங்கின. இதனால், ஹோட்டலின் 11 மாடிகளிலுமுள்ள அறைகளும் தீப்பிடித்து எரிந்தன. இந்த ஹோட்டலில் இயங்கி வந்த நாஷனல் வங்கியும் தீயில் எரிந்து பலத்த சேத மடைந்துள்ளது. முழுமையாகச் சேதமடைந் துள்ள இந்த ஹோட்டல் எந்நேரத்திலும் இடிந்து விழக் கூடும் என்றும் பகுதி மக்கள் தெரிவித்தார்கள்.

ஹோட்டலில் தங்கியிருந்த வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் உட்பட அறுபதுக்கு மேற்பட்டோர் குண்டு வெடிப்பில் சிக்கிப் பலியாயினர். இவர்களில் 12 பேர் வெளிநாட்டினராவர். நூறுக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். மீட்புப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன என, தலைநகர் பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

காயமடைந்தவர்கள் உடனடியாக அருகிலுள்ள மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டார்கள். அவர்களில் 42 பேரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது. இன்னும் பல வெளிநாட்டினர், ஹோட்டல் அறைக்குள் சிக்கியிருக்கலாமென அஞ்சப்படுகிறது என ஒரதிகாரி விளக்கினார்.

காயமடைந்தவர்களில் டென்மார்க் தூதருமடங்குவார். அவரது உடல் நிலை மோசமாகவுள்ளது. உயிரிழப்புகள், சேத விபரங்கள் இன்னும் முற்றும் முழுதாக கணிப்பீடு செய்யப்படவில்லை என மருத்துவ வட்டாரங்கள் நேற்று நண்பகல் தெரிவித்தன. (அ-ஒ)

## டோக்கியோவில் ஞாயிறன்று பூகம்பம்

ஜப்பானின் தலைநகரான டோக்கியோவை ஞாயிற்றுக்கிழமை, பூகம்பம் உலுக்கியது. எனினும் சேத விபரங்கள் உடனடியாக வெளியாகவில்லை. பூகம்பத்தில் கட்டடங்கள் சில விநாடிகள் வரை அதிர்ந்தன.

நேற்றுக்காலை உள்ளூர் நேரப்படி 7.17 மணிக்கு உலுக்கிய இப்பூகம்பத்தின் தாக்கம், ரிச்டர் அளவு கோலில் 4.8 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என ஜப்பான் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. (அ-ஒ)

# சீனாவில் சுரங்க விபத்துக்கள் 36பேர் பலி! 35 பேர் காயம்!!

பீஜிங்,செப்.22

சீனாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரு நிலக்கரி சுரங்கங்களில் ஏற்பட்ட வெடிவிபத்துக்களில் சிக்கி, 36 பேர் உயிரிழந்தனர். 35 பேர் காயமடைந்தனர் என பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்தது. மத்திய சீனாவிலுள்ள ஹினான் மாகாணத்திலுள்ள தனியாருக்குச் சொந்தமான நிலக்கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி 31 பேர் உயிரிழந்தனர். 9 பேர் காயமடைந்தனர் என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

இவ்விபத்து ஏற்பட்ட சமயத்தில் சுரங்கத்துக்குள் 108 தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். இவர்களில் 68 பேர் காயமின்றித் தப்பினர். வாயு கசிவால் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் கூறினார்கள்.

ஹிகாங் நகரிலுள்ள மற்றுமொரு நிலக்கரி சுரங்கத்தில், நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற பிறிதொரு வெடிவிபத்தில் 5 பேர் கொல்லப்பட்டனர். 26 பேர் காயமடைந் தனர். விபத்து இடம் பெற்ற சமயத்தில், சுரங்கத்துக்குள் எத்தனை ஊழியர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள் என்ற விபரம் உடனடியாக வெளியாகவில்லை என பாதுகாப்பு வட்டாரம் விளக்கியது.

# இலங்கை அரசைக் கண்டித்து ஒக்.2 இல் தமிழகம் முழுவதும் உண்ணாவிரதம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அழைப்பு

சென்னை, செப். 20

கண்மூடித்தனமான - மூர்க்கத்தனமான - காட்டுமிராண்டித்தனமான இராணுவத் தாக்குதல்கள் மூலம் ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்து வரும் இலங்கை அரசைக் கண்டித்து தமிழகம் முழுவதும் ஒக்ரோபர் 2ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் இதனை அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தப்பட வேண்டும். இந்தியா, இலங்கை அரசுக்கு வழங்கிவரும் இராணுவ உதவிகளை உடனே நிறுத்தவேண்டும். அமைதிப் பேச்சுகள் மூலம் அரசியல் தீர்வுகாண வேண்டும். இதற்கு இலங்கை அரசை இந்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தை சென்னையிலும், மாவட்ட தலைநகரங்களிலும் காநதி பிறந்தநாளான ஒக்ரோபர் 2ஆம் திகதி நடத்துவது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முடிவெடுத்துள்ளது.

விமானப்படைத் தாக்குதல்களினாலும் தரைவழித் தாக்குதலினாலும் மக்கள் நாள்தோறும் அண்மைக்காலங்களில் கொன்று குவிக்கப்பட்டு வருகிறார்கள். வீடிழந்து நாடற்ற அகதிகளாக மாற்றப்பட்டுள்ளனர். மழைக்காலம் தொடங்கிவிட்டது. பெண்கள், குழந்தைகள் ஆதரவற்றவர்களாக்கப் பட்டுள்ளனர். யாருடைய உயிருக்கும் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை.

உதவிசெய்ய வந்த ஐக்கிய நாடுகளின் பல்வேறு அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளன. தமிழகத்தில் இருந்து அனுப்பிய உணவுப் பொருட்களுக்கும், உயர்காக்கும் மருந்துப் பொருள்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. சில நாள்களாக அகதி முகாம்களில் உள்ள மக்களுக்கு உணவுபோய்ச் சேராமல் பட்டினி கிடக்கிறார்கள். பட்டினிச்சாவு நிகழும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. யாராலும் தாங்கிக்கொள்ள இயலாத பெரும் துயரத்தை ஈழத் தமிழர்கள் அனுபவிக்கிறார்கள்.

இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து, காந்தியடிகள் பிறந்த ஒக்ரோபர் 2ஆம் திகதி நடைபெறும் இந்தப் போராட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் பங்கேற்கவிருக்கின்றார்கள்.

வன்னியில்வில் சொந்த நாட்டிலேயே அகதிகளாக உள்ள 21/2 லட்சம் தமிழ் மக்களின் உயிர்காக்கும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்கத் தமிழக மக்கள் அனைவரையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அழைக்கிறது.

தமிழகத்தின் அனைத்து அரசியல் தலைவர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளிகள், பேராசிரியர்கள், மாணவர்கள், இளைஞர்கள், தொழிலாளர்கள் அனைவரும் இப்போராட்டத்தில் பங்கேற்க முன்வரவேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம் - என்று அந்த அறிக்கையில் தா.பாண்டியன் கூறியுள்ளார். (அ-ஒ)

# புலிகளின் கடற்படைத் தளபதி தம்பியண்ணா கியூபிரிவு விசாரணையில் ஒத்துழைக்க மறுப்பு

சென்னை, செப்.22

புலிகளுக்குப் பொருள்களைக் கடத்தில் முக்கிய நபராகச் செயற்பட்டவர் என்ற சந்தேகத்தில் அண்மையில் கைதானவர் தம்பியண்ணா. கடத்தலில் தனக்கு நேரடித் தொடர்பு இல்லை என்ற தகவலை மட்டும் கூறியதுடன் கடத்தலில் தொடர்புடைய மற்றவர்கள் குறித்துப் பதில் அளிக்க மறுத்துவிட்டார் என்றும் இவரிடம் இன்று (செப். 22) மூன்றாவது நாளாக நடத்தப்படும் விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் தெரியவரும் என்றும் கியூப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

மதுரை உச்சப்பட்டியில் தங்கியிருந்த விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்தவர் கைதுசெய்யப்பட்டார். இவர் கொடுத்த தகவலின்படி விடுதலைப் புலிகளின் முக்கிய கடற்படைப் பிரிவுத் தளபதியாக இருந்த தம்பி அண்ணாவை வளசரவாக்கத்தில கியூப் பிரிவுப் பொலிஸார் கைது செய்தனர்.

சென்னை புழல் சிறையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தம்பி அண்ணா பொலிஸ் பாதுகாப்புடன் கடந்த வெள்ளியன்று இராமேஸ்வரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இவரை கியூப் பிரிவுப் பொலிஸாரின் விசாரணைக்காக மூன்று நாள்கள் ஒப்படைக்குமாறு மாஜிஸ்திரேட் விஜயகுமார் உத்தரவிட்டார். நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட விசாரணையில கடத்தலில் தனக்கு நேரடித் தொடர்பு இலலை என்ற தகவலை மட்டும் கூறிய தம்பி அண்ணா கடத்தலில் தொடர்புடைய ம்ற்றவர்கள் குறித்துப் பதில் அளிக்க மறுத்துவிட்டார். இவரிடம் இன்று (செப். 22) மூன்றாவது நாளாக நடத்தப்படும் விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் தெரியவரும் - என்று கியூப் பிரிவினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (அ-ஒ)

# சச்சின் விலகல்; பத்ரிநாத் சேர்ப்பு





மும்பை, செப். 22

காயம் காரணமாக இந்தியாவின் ராணிக் கிண்ணத் தொடரில் இருந்து நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் விலகினார். இவருக்குப் பதிலாக தமிழக வீரர் பத்ரிநாத் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் உள்ளூர் கிரிக்கெட் தொடர்களில் ஒன்றான ராணிக் கிண்ணத் தொடர் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதிவரை வதோதராவில் நடக்கவுள்ளது. இதில் ரஞ்சிக் கிண்ணச் சாம்பியனான டில் லி அணியுடன், 'ரெஸ்ட் ஒவ் இந்தியா' அணி விளையாட உள்ளது. இத் தொடருக்கான அனில் கும்ளே தலைமையிலான 14 பேர் கொண்ட 'ரெஸ்ட் ஒவ் இந்தியா' அணி கடந்த 8 ஆம் திகதி மும்பையில் அறிவிக்கப்பட்டது. இதில் சச்சினும் இடம்பெற்றிருந்தார்.

தற்போது இத் தொடரிலிருந்து தாம் விலகுகிறார் என சச்சின் அறிவித்துள்ளார். கடந்த மாதம் இலங்கையில் நடந்த டெஸ்ட் தொடரின்போது இவருக்கு முழங்கையில் காயம் ஏற்பட்டது. இதனால் ஓய்வில் இருந்துவந்தார். ராணிக் கிண்ணத் தொடரில் பங்கேற்பதன் மூலம் உடல் தகுதியில் தேறிவிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முழுமையாகக் குணமடையாத காரணத்தினால் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

ராணிக் கிண்ணத்துக்கான 'ரெஸ்ட் ஒவ் இந்தியா' அணியில் சச்சினுக்குப் பதிலாக பத்ரிநாத் வாய்ப்புப் பெற்றுள்ளார். இதுகுறித்து இந்தியக் கிரிக்கெட் சபையின் செயலாளர் நிரஞ்சன் ஷா கூறுகையில், ''தேர்வுக்குழுத் தலைவர் வெங்சர்க்கார் ஆலோசனையின்படி சச்சினுக்குப் பதிலாக இந்திய 'ஏ' அணி கப்டன் பத்ரிநாத் ராணிக்கிண்ணத் தொடரில் விளையாடுவார்'' - என்று தெரி வித்தார். (அ-ஒ)

# சைமண்ட்ஸின் இடத்தை வட்சன் நிரப்புவார்



மெல்போர்ன், செப். 22

அவுஸ்திரேலிய அணியில் பங்கேற்கும் அனைத்துத் தகுதிகளும் வட்சனிடம் இருக்கிறது. சைமண்ட்ஸ் இல்லாத குறையை இவர் போக்குவார் என ஆஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங் தெரிவித்துள்ளார்.

இந்தியா, ஆஸ்திரேலிய அணிகள் மோதும் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்தமாதம் 9 ஆம் திகதி பெங்களூரில் துவங்குகிறது. இதற்கு முன்னதாக இரண்டு பயிற்சிப் போட்டிகளில் பங்கேற்கும் ஆஸ்திரேலிய அணி இன்று இந்தியா வருகிறது. ஒழுங்கு நடவடிக்கை காரணமாக அவுஸ்திரேலிய வீரர் சைமண்ட்ஸ் இத் தொடரிலிருந்து நீக்கப்பட்டார். சமீப காலமாக சிறந்த சகலதுறை வீரராக அசத்திவந்த சைமண்ட்ஸின் இடத்தை நிரப்பும் தகுதி இளம் வட்சனுக்கு இருக்கிறது என்கிறார் அவுஸ்திரேலியத் தலைவர் பொண்டிங்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில்,

சமீப காலமாக வட்சன் சிறப்பாக விளையாடி வருகிறார். இவர் ஒரு துடுப்பாட்ட வீரராக அணியில் இடம்பிடித்துள்ளார். இந்தியாவில் அனுபவ சுழற்பந்து வீச்சாளர்கள் இல்லாமல் களமிறங்குவது கடினமான விடயம் என்றாலும் மெக்கெய்ன், கிரிஜா நன்றாகப் பிரகாசிப்பார்கள் என நம்புகிறேன். இவர்கள் இருவரும் மற்றவர்களைவிட வித்தியாச மானவர்கள். ஆறு ஆண்டுகளுக்கு முன்பே கிரிஜாவைப் பார்த்திருக்கிறேன். முதன்முறையாக பார்த்த வுடனே இவரது பந்துவீச்சு என்னைக் கவர்ந்து விட்டது. இவர் மற்றவர்களை விடப் பந்தை நன்றாக சுழற்றக்கூடியவர்.

கடந்த முறை எங்கள் திட்டம் நன்றாக செயல்புரிந்தது. இந்திய வீரர்களுக்கு நெருக்கடி கொடுத்து தொடரைக் கைப்பற்றினோம். சூழ்நிலைகள் ஒத்துழைத்தால் இம் முறையும் சிறப்பாக செயற்படுவோம். - இவ் வாறு பொண்டிங் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# ஐ.தே.கட்சி வேட்பாளரின் வீடு மீது கல்குடாவில் கைக்குண்டுவீச்சு

மட்டக்களப்பு, செப். 22

மட்டக்களப்பு, கல்குடாப் பகுதியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஒருவருடைய வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இனந் தெரியாத நபர்கள் கைக்குண்டுத்தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டது. எனினும் இச்சம்பவத்தின்போது எவரும் காயமடையவில்லை.

ஆறுமுகம் ஜெகன் என்னும் வேட் பாளருடைய வீடே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கானது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போது தமிழ் மக்கள் விடுதலைப் புலிக ளின் கட்சியினரால் தமக்குத் தொலை பேசிமூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று பொலிஸ் நிலையத்தில் ஏற்கனவே அவர் முறைப்பாடு செய்திருந்தார். தேர் தல்-சமயத்தில் அவருடைய வீட்டின் மீது இரண்டு தடவைகள் கைக்குண்டுத் தாக்கு தல்கள் நடத்தப் பட்டமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

நேற்றைய தாக்குதல் சம்பவம் தொடர் பாக அவர் மீண்டும் பொலிஸில் முறைப் பாடு செய்துள்ளார். (அ-சி)



கொழும்பில் தமிடிழர்கள் பதிவுசெய்யப் படுவதை படமெடுக்கச் சென்ற பத்திரிகை யாளரை தடுத்தபோது....

## கிளிநொச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து விடுதலைப் புலிகளின் கவனத் திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் தெரி வித்துள்ள ஐ.நா., சர்வதேச சட்டங்களுக்கு அமைய மனிதாபிமானச் சொத்துக்களை யும், பணியாளர்களை யும் பாதுகாக்க வேண்டுமெனவும் கோரியுள்ளது. (அ-சி)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் இந்தச் சந்திப்பு முக்கியத்து வம் அற்றது எனவும் அரச வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

இதேவேளை, எரிக் சொல்ஹெய்முட னான இந்தச் சந்திப்பின்போது விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டாலே எதிர்காலத்தில் பேச்சுகள் சாத்தியம் என் பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலி யுறுத்துவார் என தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என்பதையும் ஜனாதிபதி எடுத்துரைப்பார். நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், தனது நாட் டின் சமாதானப் பிரதிநிதி ஜொன் ஹென் சென் பௌரை கிளிநொச்சி செல்வதற்கு அனுமதிக்குமாறு ஜனாதிபதியை மீண் டும் கேட்டுக்கொள்வார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நோர்வே முன்னர் விடுத்திருந்த வேண்டு கோளை அரசு நிராகரித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (அ)

## கொழும்புத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டது. கடலில் சண்டை ஏதும் மூண்டு விட்டதோ என்று மக்கள் அங்கலாய்த்த னர். எனினும் குண்டுச்சத்தம் ஓய்ந்ததும் பதற்றம் மெல்லத் தணிந்தது.

''இது கடற்படையினரின் ஒத்திகை நடவடிக்கை. பயப்படும்படியாக ஒன்று மில்லை'' - என்று பொலிஸ் தரப்பில் கூறப் பட்டது. (சி)

## கோணேஸ்வரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிளில் வந்த ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த சுமார் ஆறு வருடங்களாகச் சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கோணே சர் ஆலயத்தின் பிரதம குருக்களாகப் பணிபுரிந்த இவர் நேற்று மாலை தனிப் பட்ட அலுவலாக நகருக்கு வந்துவிட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பிச் சென்றார். அவ்வேளை மோட்டார் சைக்கிளைப் பின் தொடர்ந்த ஆயுததாரிகள் அவர் மீது துப் பாக்கிப் பிரயோகம் செய்தனர். அவர் அந்த இடத்திலேயே மரணமானார். இச்சம்பவம் நேற்று மாலை 5.45 மணியளவில் இடம் பெற்றது.

(அ-151)

## அடாவடித் தனமாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவு இடம்பெற்ற இடங்களுக்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானித் தார் பிரபாகணேசன். அவருடன் கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களான ந.குமரகுரு பரன், வேலணை வேணியன், . எஸ். ராஜேந்திரன் மற்றும் எவ்.எம்.ஷியாம் ஆகியோரும் குறித்த பொலிஸ் பதிவு நடந்த இடங்களுக்குச் சென்றிருந்தனர். அதன் பின்னர்மேற்படி பொலிஸ் பதிவு நடைமுறை தொடர்பாக பிரபா கணேசன் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது:-

மனித நேயத்திற்கு அப்பாற்பட்டு ஒருசிலரை மட்டும் வேறுபடுத்திக் காட்டும் இந்த நடவடிக்கைகளை சர்வ தேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளோம். யுத்தம் நடைபெறுகிறது என்ற அடிப்படையில் எதை வேண்டு மென்றாலும் செய்யலாம் என்ற அரச பாது காப்புத் தரப்பினரின் போக்கு அடாவடித் தனமானதாகும்.

வடக்கில் யுத்தத்தில் வெற்றிபெற்று தமிழ் மக்களிடையே ஜனநாயகத்தை ஏற்படுத்தப் போவதாகப் பிதற்றும் அரசு கொழும்பில் தமிழ் மக்களின் மனித உரிமை களை மீறிச் செயற்படுகிறது.

வெறுமனே அரசுக்கு கண்டனம் தெரிவித்துவிட்டு வாய்மூடி இருப்பதற்கு நாங்கள் அரசின் பங்காளிகள் அல்லர். ஆகவே சர்வதேச மட்டத்திற்கு இவ்விட யத்தை ஏற்கனவே எடுத்துச் சொல்லியுள் ளோம். சர்வதேச அழுத்தங்கள் காரணமாக அரசின் பல்வேறு மனித உரிமை மீறல் செயற்பாடுகளை நாங்கள் கட்டுப்படுத் தியுள்ளோம் என்பது விடயம் அறிந்தவர் களுக்கு நன்கு தெரியும்.

இப்படியான - தமிழ் மக்கள் மீதான- வேறுபாடுகளை அரசு அமுல்படுத்துமா யின் இனங்களுக்கிடையே மாறுபட்ட உணர்வுகளை வளர்ப்பதற்கே இது உத வும். வெறுமனே வடக்கில் யுத்தத்தை வென்று தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படுமென அரசு கூறிவருவதை நிறுத்திவிட்டு முதலில் தென்னிலங்கை யில் தமிழ் மக்களுக்கு அச்சமின்றி சுதந் திரமாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக்காட்ட வேண்டும். அதைவிடுத்து இப்படியான காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளைக் கொண்ட அரசுகள் எந்தச் சரித்திரத்திலும் நிலைத்து நின்ற தில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும் - என்றார்.

(அ-சி)


கணினித்துறையில் அனைவரும் பயனடையும் விதமாக...

விசேட சிறப்பு சலுகை

100% செய்முறைப்பயிற்சி

தமிழ் மொழி விளக்கங்களிலான முற்றிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய

DIPLOMA IN HARDWARE ENGINEERING

Fee 1,500/= only ஆரம்பம் : 22/08/2008, 24/08/2008, 27/08/2008 10.00 am & 3.00 pm

Duration : 2 Months

Microprocessor, Various Mother Board Handing, All Type of Cards, HDD, FDD, CD ROM Drive, Printers, Installation of - O/S & Software, Assembling upgrading, Configuring, Troubleshooting, Repairing, User Level Networking

DMI COMPUTER EDUCATION

NO. 113, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்


# தென்மராட்சி இளைஞர் யாழ்நகரில் கலைத்துக் கலைத்துச் சுடப்பட்டார்!

தென்மராட்சியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ். நகரப் பகுதியில் றக்கா வீதி யில் கலைத்துக் கலைத்துச் சுட்டுக் கொல் லப்பட்டார்.

அல்லாரையைச் சேர்ந்த தர்மலிங்கம் குமாரராஜ் (வயது 29) என்ற இளைஞனே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். இச் சம்ப வம் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றதாக அறியவந்தது. யாழ். நீதி வான் இ.வசந்தசேனன் நேற்றுமாலை சம்பவ இடத்தில் விசரணைகளை நடத்தினார்.

யாழ். றக்கா வீதியில் சைக்கிலில் சென்று கொண்டிருந்த பிரஸ்தாப நபரை நோக்கி எதிர் எதிராக மோட்டார் சைக்கிளில்வந்த வர்கள் சுட்டனர். கொலையுண்டவர் அந் தப் பகுதியில் உள்ள ஒழுங்கைகளால் தப்பி ஓட முயன்றார் ஆனால் ஆயுததாரிகள் அவரைக் கலைத்துக்கலைத்துச் சுட்டனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-78)

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது உடல் நாடாளுமன்றில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும். அன்றைய தினம் பிற்பகல் உடல்கண்டிக்குஎடுத்துச்செல்லப் பட்டு அங்கு இறுதிக்கிரியைகள் இடம்பெறும்.

1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை இரண்டு வருடங்கள் மாத் திரம் அவர் ஜனாதிபதியாகப் பதவி வகித்தார்.

1956 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் கண்டி உடுநுவர தேர்தல் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்ட அவர் தோல்வியடைந்தார். 1960 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் போட்டி யிட்டும் அவர் தோல்வி யடைந்தார். இதனைத் தொடர்ந்து 1970 இல் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் ஐக் கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டி யிட்டு முதன் முதலாக நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார்.

1977 இல் ஊடகத்துறை அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சராகவும் பதவி வகித்தார்.

பிரேமதாஸவின் மரணத்தைத் தொடர்ந்து இலங்கையின் மூன்றாவது நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியாக அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

## கருணா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்காகியுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது என்று கூறப்படுகிறது. எனினும் அச்சமயம் அலுவலகத்திலிருந்த கருணா குழுவைச் சேர்ந்த நால்வர் எவ்வித காயமு மின்றித் தப்பினர் என்றும் கூறப்பட்டது.

இச்சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்து சுமார் 50 மீற்றர் தொலைவிலேயே பொலிஸ்நிலையம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கரம்பன் குளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் மீட்டனர் என்றும் படைத்தரப்பு தெரி வித்துள்ளது. இந்த நடவடிக்கையில் 4 படையினர்காயமடைந்ததாகவும் விடுதலைப் புலி களுக்கு பலத்த இழப்பு ஏற்பட்டுள்ள தாக வும் படைத்தரப்பு மேலும் தெரிவித் த்து. (அ-1)

## வடக்குத் தமிழர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விகளால் மக்கள் துளைத்தெடுக்கப் பட்டனர்.

''பொலிஸார் எம்மிடம் எமது முகவரி யையும் குடும்ப விவரங்களையும் கொழும் புக்கு வந்தமைக்கான காரணத்தையும் கேட்டனர்.'' என்று பதிவை மேற் கொண்ட ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

''நாங்கள் எப்போது திரும்பிச் செல் வோம் என்பதையும் எனது பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என்பதையும் அவர்கள் கேட்டுப் பதிந்தனர்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் பதிவு நடந்த பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் பெரும் எண் ணிக்கையான பொலிஸாரும் இராணுவத் தினரும் குவிக்கப்பட்டிருந்தனர். பொலிஸ் அதிகாரிகள் பலரும் அங்கு பிரசன்னமா யிருந்தனர்.

பதிவு செய்ய வந்த தமிழ் மக்கள் அனை வரும் கடுமையான உடற்சோதனைக்குப் பின்னரே குறித்த நிலையத்துக்குள் அனு மதிக்கப்பட்டனர். சில இடங்களில் ஒலிபெருக்கி கள் மூலம் பொது மக்களுக்கு மும்மொழிக ளிலும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. பதிவு செய்வதற்காக காலை முதல் நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களைப் படம் பிடிப்பதற்கு சில இடங்களில் ஊடகவியலா ளர்கள் பொலிஸாரால் தடுக்கப்பட்டனர்.

கொழும்பில் வட பகுதி தமிழர்கள் தனி யாகப் பதிவு செய்யப்பட்டமை தமிழர்களுக் கும் பொலிஸாருக்கும் இடையே காணப் படும் நம்பிக்கையின்மையை காட்டுவதாக ரொய்ட்டர் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இதேவேளை தமிழ் மக்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு பொலிஸார் உத்தர விட்டுள்ளமையால் இனங்களிற்கிடையே பிளவினை அதிகரிக்கலாம் என மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம் தமிழ் மக்கள் மத்தியில் இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற உணர் வையும் பாரபட்சமாக நடத்தப்படுவது குறித்த உணர்வையும் அரசு அதிகரிப்ப தாக மாற்றுக் கொள்கை நிலையத்தின் இயக்குநர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார். (அ-சி)

## அக்கராயனில் உக்கிரசமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை 5.50 மணியளவில் தொடங்கிய இந்தச் சமர் மாலைவரை தொடர்ந்துகொண்டிருந்தது. இந்த மோத லின்போது இருதரப்பினருக்கும் பெரும் இழப்புகள் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று சில இணையத்தளங்கள் நேற்றுமாலை செய்தி வெளியிட்டன. சண்டை நடந்த பகுதிகளில் அரச விமானப் படையின் விமானங்கள் நேற்றுப்பல தடவைகள் தாக்குதல் நடத்தின என் றும் தெரிவிக்கப்பட்டது.

அக்கராயனுக்கு அருகில் நிலை கொண்டிருக்கும் துருப்புகளை அங்கி ருந்து துரத்தும் நோக்குடன் விடுதலைப் புலிகளே நேற்றைய தாக்குதலை ஆரம்பித் தனர் என்றும் இதன்போது இராணுவத்தி னர் தமது நிலைகளை விட்டு வெளியேறி சிறிது தூரம் பின்நகர்ந்தனர் என்றும் சில செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

எனினும் நேற்று மாலை இந்தச்செய்தி எழுதப்படும்வரை இழப்புகள் தொடர்பாக வெளி வந்த தகவல்களை உத் தியோக பூர்வமாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

அதே வேளை கிளிநொச்சி மாவட்டத் தில் கடும் சண்டை தொடர்வதாகவும்-

விமானங்கள், ஹெலிகொப்டர்கள் தாக்குதல் நடத்துவதாகவும்- பரஸ்பரம் தாக்குதல் தொடர்வதாகவும் - இணையத் தளச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

இரண்டு ஆட்லறிச் செல்கள் நண்பகல் ஒரு மணியளவில் ஏ-9 பாதையில் வீழ்ந்து வெடித்தன. எனினும் ஏ-9 ஊடான போக்கு வரத்து இடம்பெற்றது. நிவாரணப் பொருள் கள் வந்து சேர்ந்ததாகத் தகவல் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதேவேளை -

வன்னிவிளாங்குளம்; பகுதியை நோக்கி முன்னேறமுயன்ற இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடை யில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கடுஞ் சமரில் இராணுவத் தரப்பில் 15 பேர்வரை உயிரிழந்தனர். 18 பேர்வரை படுகாயமடைந்தனர் என்று புலிகள்தரப்பில்நேற்றுஅறிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் வன்னி விளாங்குளம் பகு தியை நோக்கி பிற்களச் சூட்டதரவு களுடனும் விமானப்படையினரின் தாக்குத லின் உதவியுடனும் அரச படைகள் முன் நகர்வை மேற்கொண்டனர். அதற்கு விடு தலைப் புலிகள் ஆட்லறி மற்றும் பீரங்கித் தாக்குதலுடன் முறியடிப்புச் சமரை மேற் கொண்டனர். அச்சமர் சுமார் 8 மணிநேரம் இடம்பெற்றது என்று புலிகள் தரப்பில் மேலும் அறிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கடுமையான தாக்குதலினால் அரச படைகள் பலத்த இழப்புகளுடன் பழைய நிலைகளுக்குப் பின்வாங்கிச் சென்றன என்றும் புலிகள் தரப்பில் கூறப்பட்டது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சை 2008 - மாதிரி வினாத்தாள்
General Certificate of Education (Ord.Level) Examination 2008 - Model Question Paper

| T | |
|---|---|
| 33 | I |

## வரலாறு
## History

ஒரு மணித்தியாலம்
One hour

**சகல வினாக்களுக்கும் விடையளிக்குக.**
**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
இந்திய வரைபடத்தைக் கொண்டு 1 - 5 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.



01. புராதன காந்தார தேசத்தின் தலைநகரான தக்சிலா குறிக்கப்பட்டிருக்கும் ஆங்கில எழுத்து எது?
1) E 2) K
3) I 4) F

02. டில்லி சுல்தானிடமிருந்து பிரிந்து சென்று ஸ்தாபித்த பாமினி அரசு காட்டப்படும் எழுத்து எது?
1) C 2) L
3) A 4) B

03. இந்தியாவை ஆண்ட ஒரு அரச வம்சத்தின் தலைநகரம் எழுத்தால் காட்டப்பட்டுள்ள அது எப் பெயரால் அழைக்கப்பட்டது?
1) டில்லி. 2) தேவகிரி.
3) குல்பர்க். 4) புஸ்பபுரம்.

04. பிரபலமான சோமநாதர் ஆலயம் அமைந்துள்ள இடத்தைக் குறித்துள்ள எழுத்து யாது?
1) J 2) F 3) G 4) E

05. B எழுத்து குறிப்பது தென்னிந்தியாவில் காணப்பட்ட புகழ்பெற்ற பரந்து விரிந்த தேசமாகும். அது
1) பாண்டிய தேசம். 2) சோழ தேசம். 3) விஜயநகர தேசம்.
4) கலிங்க தேசம்.

**தரப்பட்டுள்ள விடைகளில் மிகப் பொருத்தமானதைத் தெரிவுசெய்க.**

06. புராதன இலங்கை சிறந்த வர்த்தக மைய நிலையமாக விளங்கியதாக ''பர்சியன் யுத்தம்'' எனும் உரோம இதிகாசத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எழுத்தாளர் யார்?
1) புரோகோப்பிஸ். 2) மார்க்கோபோலோ.
3) பிலினி. 4) மெகஸ்தினீஸ்.

07. லம்பகர்ண வம்சத்தின் முதலாவது மன்னன் பின்வருபவர்களுள் யார்?
1) துட்ட கைமுனு. 2) எல்லாளன்.
3) வசபன். 4) மகாசேனன்.

08. எந்த யுகத்தில் முவதேவி தாவத, சத தாவத, அமாவதுர ஆகிய நூல்கள் எழுதப்பட்டன?
1) அநுராதபுரம். 2) பொலநறுவை. 3) தம்பதெனிய. 4) கோட்டை.

09. கி.மு. காலத்தில் வட இந்தியாவை ஆட்சிபுரிந்த கடைசி நந்தவம்ச அரசன் யார்?
1) மகாபத்மநந்தன். 2) தனநந்தன். 3) உபநந்தன். 4) ஜயநந்தன்.

10. வரலாற்றுச் சிறப்பான முல்லேரியா யுத்தம் எத்தனையாம் ஆண்டு ஏற்பட்டது?
1) கி.பி. 1519 2) கி.பி. 1521 3) கி.பி. 1562 4) கி.பி. 1604

11. ''பிரதிநிதிகளின் அனுமதியின்றி வரி அறவிட முடியாது'' என முதன்முதல் கூறப்பட்டது எந்தப் புரட்சியின் போதாகும்?
1) இங்கிலாந்து. 2) அமெரிக்கா. 3) பிரான்ஸ். 4) ரஷ்யா.

12. ஆரம்பகால இலங்கையின் ஆளுகை தொடர்பாக சரியான கூற்றாகக் கொள்ளக்கூடியது எது?
1) கல்விச் செயற்பாடுகளுக்காக அரச உதவி கிடைத்தமை.
2) பிதாவழி சமூகமாக இருப்பினும் பெண்களுக்கு உயர் அந்தஸ்து கிடைத்தமை.
3) அரசாட்சி சகோதரர்களிடமிருந்து சகோதரர்களுக்குக் கிடைத்தமை.
4) வைத்தியச் சேவைக்காக அர்ச உதவி கிடைக்காமை.

13. நிரல்-1 இன் விடயங்களை நிரல்-11 இன் தரவுகளோடு தொடர்புபடுத்தின் கிடைக்கும் சரியான விடையின் ஒழுங்கு யாது?

| நிரல் - 1 | நிரல் - 2 |
|---|---|
| A பிசோகொடுவ (கலிங்கல் தொட்டி) | E சுவடுகளுக்கிடையில் மடைக்கதவு அமைத்தல். |
| B ஜயகங்கை | F வாவியின் நீர் அமுக்கத்தைக் கட்டுப்படுத்தல். |
| C மடைக்கதவு | G நிலச்சரிவின் அடிப்படையில் கால்வாய் அமைக்கும் நுட்பம் |
| D மினிப்பே | H குளத்தில் சேரும் சேற்றை அகற்றும் வழி. |
| | I அணைக்கட்டின் உட்புறப் பாதுகாப்பு. |
| | J சுவடுகளுக்கிடையில் அணைகட்டி நீரைத் திருப்பல். |

1) FGHJ 2) EFGI 3) JGEF 4) FJHE

14. பின்வரும் கூற்றுக்கள் போர்த்துக்கேய ஆளுகையால் இலங்கையில் ஏற்பட்ட சில நன்மைகள். இவற்றில் சமூகத்திற்குக் கிடைத்த நன்மையாகக் கொள்ளக் கூடியது எது?
1) கபிரிஞ்ஞா சங்கீத அறிமுகம். 2) மேடை நாடகக்கலை அறிமுகம்.
3) சாதிமுறை வழக்கொழிந்தமை. 4) கத்தோலிக்க மதம் பரவியமை.

15. மத்தியகால ஐரோப்பாவில் இராஜகாரிய முறைக்குரி[illegible]
1) நில உரிமைக்கேற்ப பொருளாதார முறைமை.
2) மத்தியதர வகுப்பினர் தோற்றம்.
3) தகுதி அடிப்படையில் தொழில் கிடைத்தமை.
4) விவசாயம் வீழ்ச்சியடைந்தமை.

16. நான்காவது தர்மசங்கம் எந்த மன்னனது ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது?
1) தர்ம அசோகன். 2) பிம்பிசாரன். 3) அஜாசத்ரு. 4) கனிஷ்க.

17. அநுராதபுர காலத்தில் இலங்கையின் வியாபார நடைமுறை தொடர்பாக தென்பட்ட சிறப்பான பண்பு அல்லாதது?
1) பண்ட மாற்று முறை மூலம் வியாபாரம் நடைபெற்றமை.
2) பிறநாட்டு வர்த்தகர்கள் எமது நாட்டுக்கு வந்த சான்றுகள் உள்ளன.
3) மேலைத்தேய நாடுகளோடு மாத்திரம் வியாபாரம் நடைபெற்றமை.
4) வியாபாரப் பொருட்கள் மீதான வரி அறவிட்டமை.

18. டில்லியை மையமாகக்கொண்டு இந்தியாவில் சுதந்திர இஸ்லாமிய இராச்சியத்தை உருவாக்கிய மன்னன் யார்?
1) அலாவுதீன் வெல்ஜி. 2) குதுப்பீன்.
3) இல்துத் மிஸ். 4) கியாஸுந்தீன் பால்பன்.

19. மேகதூதம், ரகுவம்சம், குமார சம்பவம் போன்ற சிறந்த நூல்களைப் படைத்தவர் யார்?
1) சாணக்கியன் 2) விஷ்ணுசர்மன் 3) கௌடில்யர் 4) காளிதாசன்

20. ''காசியப்பன் தனது தந்தையான தாதுசேனனின் சொத்துக்களைக் காட்டும்படி கேட்ட காசியப்பனுக்கு கலா வாவியைக் காட்டி இதுவே தான் சேர்த்த சொத்தென்று கூறியதாக வாய்வழிக் கதைகள் கூறுகின்றன. இதன் மூலம் பிரதிபலிக்கும் உண்மையாவது,
1) குளங்களை அமைத்து விவசாயத்திற்கு நீர் வழங்கல் மன்னர்களின் கடமையாக இருந்தமை.
2) புராதன மன்னர்கள் நீரைத்தேக்கி வைப்பது செல்வத்தைத் தேக்கி வைப்பதற்கு ஒப்பாகும் என எண்ணியமை.
3) புராதன மன்னர்கள் தமது செல்வத்தைக் குளங்களுக்குள் மறைத்து வைத்திருந்தமை.
4) மக்களுக்கு நீரை வழங்கி மன்னர்கள் பெருஞ்செல்வத்தைச் சேகரித்துக் கொண்டமை.

21. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் தொனிப்பொருளைக் கொண்டு மனிதனை உயர்ந்தவனாகக் கணிக்கவேண்டும் எனும் மனித வாதக் கருப்பொருளை மையமாகக்கொண்டு ஏற்பட்ட புரட்சி எது?
1) பிரஞ்சுப் புரட்சி. 2) ஆங்கிலேயப் புரட்சி.
3) அமெரிக்கப் புரட்சி. 4) ரஷ்யப் புரட்சி.

22. புராதன ஆரியக் குடியிருப்பான காஜரகாமம் எந்த ஆற்றுப்பள்ளத்தாக்கின் அருகிலாகும்?
1) கிரிந்த 2) ஜஜ்ஜர 3) கப்பகந்தர 4) கதம்ப.

23. சமவுடைமை தொடர்பாக சிந்தனைகளை உலகிற்கு அறிமுகப்படுத்திய சிந்தனைவாதி யார்?
1) ஜெரம் பென்கம் 2) ஜோன் ஸ்டுவர்ட் மி
3) டேவிட் நிகாடோ 4) கார்ல் மார்க்ஸ்

24. இந்தியாவை ஆட்சிபுரிந்த எம்மன்னர்கள் ''மகா ராஜாதிராஜா'' எனும் பட்டத்தைத் தாங்கியிருந்தனர்?
1) மௌரியர் 2) குப்தர் 3) மொகலாயர் 4) குஷானர்

25. கி.பி. 112 இல் தென்னிந்தியாவை ஆக்கிரமித்த 12000 சிறைக்கைதிகளை இங்கு கொண்டுவந்த மன்னன் யார்?
1) முதலாம் பராக்கிரமபாகு 2) முதலாம் விஜயபாகு
3) முதலாம் கஜபாகு 4) முதலாம் புவனேகபாகு

26. கி.பி. 1176.07.04 ஆம் திகதி அமெரிக்காவின் சுதந்திரம் தொடர்பான கருத்தை வெளியிட்வராக வரலாற்றில் இடம் பிடித்தவர் யார்?
1) ஜோன் கென்னடி 2) ஆபிரகாம் லிங்கன்.
3) பில் கிளின்டன் 4) ஜோர்ஜ் வாஷிங்டன்

27. உலக வரலாற்றின் மிக முக்கிய நிகழ்வுகள் நிரல்-1 இலும், அது தொடர்பான மனிதர்/இடங்கள் நிரல்-2 இலும் தரப்பட்டுள்ளன. நிரல்-1, 2 ஐத் தொடர்பு படுத்தும்போது பெறப்படும் சரியான விடையாவது

| நிரல் - 1 | நிரல் - 2 |
|---|---|
| A மறுமலர்ச்சி | E அனேக நாடுகளைக் குடியேற்ற நாடுகளாக்கியமை. |
| B கைத்தொழிற் புரட்சி | F வார்சோ உடன்படிக்கை. |
| C முதலாம் உலக யுத்தம் | G லியனாடோ டாவின்சி. |
| D 2 ஆம் உலக யுத்தம் | H விசைத்தறி. |
| | I பேர்ல் துறைமுகக் குண்டுத் தாக்குதல். |

1) EFGH 2) GHFI 3) EGHI 4) GHIF

28. கம்பூச்சியா, கம்போடியா எனும் பெயர்களில் அழைக்கப்படும் நாடு புராதன காலத்தில் இந்துச் சக்கரவர்த்தியால் ஆழப்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ளன. அம் மன்னன் யார்?
1) சைலேந்திரன். 2) பிரேந்திரன்.
3) ஜயேந்திரன். 4) சுரேந்திரன்.

29. சங்கமித்தையும் குழுவினரும் இலங்கையில் தரையிறங்கிய இடமாகக் கருதப்படுவது,
1) கோகர்ணம். 2) மகாதித்த.
3) கல்யாணி. 4) ஜம்புகோளப் பட்டினம்.

30. இறுதி இராப்போசன விருந்து எனும் புகழ்வாய்ந்த ஓவியத்தைத் தீட்டிய கலைஞர் யார்?
1) டாவின்சி 2) கெப்லர் 3) மைக்கல் ஏஞ்சலோ 4) இராப்பேல்

31. வரலாற்றுச் சிறப்புமிக்க எம்பக்கே தேவாலயம் எந்த மன்னனது காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது?
1) 4 ஆம் புவனேகபாகு. 2) 3 ஆம் விக்கிரமபாகு.
3) 4 ஆம் பராக்கிரமபாகு. 4) 3 ஆம் புவனேகபாகு.

32. கி.பி. 1873 இல் மாளிகாகந்தை வித்யோதயா பிரிவெனாவை ஆரம்பித்து வைத்தவர் யார்?
1) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட். 2) ரத்மலான தர்மாராம தேரர்.
3) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர். 4) மீகெட்டுவத்த குணானந்த தேரர்.

(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




33. 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் சிறுசிறு ராச்சியங்களாக இருந்த ஜேர்மனி எந்த வருடத்தில் ஒன்றுபட்ட நாடானது?
1) 1852. 2) 1882. 3) 1871. 4) 1888.

34. இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது தாதுகோபம் எது?
1) தூபராம 2) இசுறுமுனி
3) ஜேதவனராம 4) வன்வெலிசாய.

35. பாண்டிய மன்னனான ஸ்ரீ மாறஸ்ரீ வல்லபன் இலங்கையை ஆக்கிரமித்தபோது இலங்கையை ஆட்சிபுரிந்த மன்னன் யார்?
1) 2 ஆம் சேனன் 2) மானவர்மன்
3) விஜயன் 4) முதலாம் சேனன்.

36. மத்தியகால ஐரோப்பா இருண்ட யுகமாகக் கருதப்பட்டதன் காரணமாக அமைவது,
1) அக்காலத்தில் காணப்பட்ட அரசியல் குழப்பநிலை.
2) பாப்பரசர்களாலும், கத்தோலிக்கத் திருச்சபையினாலும் ஆட்சி நடைபெற்றமை.
3) மின்சார வசதி காணப்படாமையாலாகும்.
4) அக்கால சமூகத்தில் காணப்பட்ட மானிய முறைமையாகும்.

37. கி.பி. 1533 இல் பிரான்சிஸ்கோ பிஸாரோ எனும் நாடுகாண் பயணியால் கண்டு பிடிக்கப்பட்ட பிரதேசம் எது?
1) அமெரிக்கா 2) பெரு
3) கனடா 4) மெக்சிக்கோ

38. மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மணிமேகலை/மினிப்பே கால் வாயை நிர்மாணித்த மன்னன் யார்?
1) தாதுசேனன் 2) 2 ஆம் அக்போ
3) முதலாம் சேனன் 4) 2 ஆம் முகலன்.

39. கலைநுட்பம் பொருந்தியதும் இலங்கையில் உயர்ந்ததுமான காவற்கல் காணப் படும் இடம் எது?
1) ரத்ன பிரசாதய 2) பொலநறுவை வட்டதாகை
3) இசுறுமுனி 4) அரசசபை மண்டபம்

40. கீர்த்தி ஸ்ரீமேவன் மன்னனது காலத்தில் இலங்கை அரசியல் வரலாற்றில் ஏற்பட்ட முக்கியமான நிகழ்வு யாது?
1) அபயகிரி மகாவிகாரை பிக்குகளுக்கிடையிலான சங்கபேதம் ஏற்பட்டமை.
2) புனித தந்த தாது இலங்கைக்குக் கொண்டுவரப்படல்.
3) ஜேதவனாராம நிர்மாணம்.
4) பாகியனின் இலங்கை வருகை.

3) அநுராதபுர ஆட்சிக் காலத்தில் உயர் கட்டடக் கலைநுட்பம் காணப்பட்டதை இரண்டு உதாரணங்களுடன் விளக்குக.

## வரலாறு II

மூன்று மணித்தியாலங்கள்


சகல வினாக்களுக்கும் விடையளிக்குக.
**'அ' பகுதியில் இரண்டு வினாக்களுக்கும், 'ஆ' பகுதியில் இரண்டு வினாக்களுக்கும், 'இ' பகுதியில் கட்டாய வினாவுக்கும் விடையளிக்குக.**

பகுதி - 'அ'

01. 1) அநுராதபுர யுகத்தின் ஆரம்ப காலத்தில் இலங்கையில் காணப் பட்ட அரசியல் அலகுகள் ABC எனக் காட்டப்பட்டுள்ளன. இவ் அரசியல் அலகுகளை ABC ஒழுங்கில் எழுதுக.

2) புராதன ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிர்வாகப் பதவிகள் சில தரப்பட்டுள்ளன. அவற்றை விளக்குக.

A - ஏப்பா
B - மாப்பா
C - புரோகிதர்
D - அமச்சே




02. 1) போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஆண்ட காலத்தில் மலைநாட்டை ஆட்சிபுரிந்த மன்னர்கள் மூவரின் பெயர்களை எழுதுக.

2) போர்த்துக்கேயர் கரையோரப் பகுதிகளின் பொறுப்பைத் தக்க வைத்துக் கொள்ள தேவையேற்பட்ட இரு காரணங்களைத் தந்து சுருக்கமாக விளக்குக.

3) போர்த்துக்கேய ஆளுகையின் விளைவுகளாக நமது சமூகத்தில் காணப் படும் இரு பண்புகளை உதாரணங்களுடன் விளக்குக.

03. 1) குளமொன்றின் முக்கிய பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றினதும் ஒரு பயன்பாட்டைத் தருக.

A - அலைதாங்கி ( சலபனாவ)
B - கலிங்கற் தொட்டி ( பிசோகொடுவ)
C - சுருங்கை ( பிடவான)

2) உலர் வலய காலநிலை, தரையமைப்பு என்பன குளங்கள் அமைக்கும் போது எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைச் சுருக்கமாகத் தருக.

3) அநுராதபுர காலத்தில் கட்டடக் கலைஞர்களிடம் உயர் தொழிற் தேர்ச்சி நிலவியமை தொடர்பாக இரு உதாரணங்களுடன் விளக்குக.

04. 1) கண்டி இராஜதானிக் காலத்தில் காணப்பட்ட நிர்வாக முறைமைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றினதும் கடமைகள் ஒன்று வீதம் தருக.

A - பந்தே
B - ரட்டேவசம
C - மஹவாசல (வேத்தியல் மாளிகை)

2) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் காலத்தில் கண்டி இராச்சியத்தில் பண் பாட்டு அபிவிருத்தி தொடர்பாக இரண்டு காரணங்களைக் கூறி விளக்குக.

3) 1815 இல் மலைநாட்டு உடன்படிக்கையின் பின்னர் கண்டி இராச்சியம் சுதந் திரம் இழந்து சென்ற முறையை இரண்டு காரணங்கள் மூலம் விளக்குக.

பகுதி - 'ஆ'

05. 1) மத்திய காலத்தில் ஐரோப்பாவில் நிலவிய நிலமானிய முறை வீழ்ச்சிய டைந்தமைக்கான காரணங்கள் மூன்று எழுதுக.

2) கைத்தொழிற் புரட்சி பிரித்தானியாவின் இரும்பு, உருக்கு கைத்தொழில் துறைக்கு எவ்வாறு அடித்தளமிட்டது என்பதை விளக்குக.

3) 16 ஆவது நூற்றாண்டின் பின்னர் உலகின் ஏனைய நாடுகளுக்கு கைத் தொழில் துறைகள் விரிவடைந்தமைக்கான இரு காரணங்களைச் சுருக்க மாக விளக்குக.

06. 1) பிரஞ்சுப் புரட்சிக்கு அடித்தளம் அமைத்த தத்துவக் கருத்துக்களை வெளியிட்ட மூவரது பெயர்களைத் தருக.

2) பிரஞ்சுப் புரட்சி ஏற்படுவதற்கான பின்னணியை இரு காரணங்களூடாக விவரிக்குக.

3) ரஷ்யப் புரட்சியின் விளைவுகள் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக.

07. 1) ஐக்கிய நாடுகள் சபையின் மூன்று நோக்கங்களைத் தருக.

2) ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையின் செயற்பாடுகள் அதிகாரங்கள் இரண்டினை தந்து சுருக்கமாக விளக்குக.

3) மூன்றாம் உலக யுத்தம் ஏற்படுவதைத் தடுக்கும் முகமாக ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இரண்டினை விளக்குக.

08. 1) இரண்டாம் உலக யுத்தம் ஏற்படக் காரணமாக இருந்த மூன்று நாடுக ளைத் தருக.

2) இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்னணியாக அமைந்த காரணங்களை உதாரணங்களுடன் தருக.

3) இரண்டாம் உலக யுத்தத்தின் பிரதிபலன்கள் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக.

பகுதி - 'இ'

**09. இவ் வினா கட்டாயமானது. இரு பகுதிகளைக் கொண்டது.**

1) தரப்பட்ட இலங்கைப் படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்து பெயர் களை எழுதுக. இவற்றில் விரும்பிய இரண்டிற்கு வரலாற்றுக் குறிப் புகள் எழுதுக.

| | |
|---|---|
| ஜனநாதபுரம் | நல்லூர் |
| மகியங்கனை | பொம்பரிப்பு |
| சீத்தாவக்கை | திருக்கேதீச்சரம் |
| எதுகல்புர | ரந்தெனிகல |
| சதரகோரலய | இப்பன்கடுவ |

2) தரப்பட்ட உலகப் படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்து பெயர் களை எழுதுக. இவற்றில் விரும்பிய இரண்டிற்கு வரலாற்றுக் குறிப்பு கள் எழுதுக.

| | |
|---|---|
| மக்கா | பிரான்ஸ் |
| இந்தோனேசியா | ஆஸ்திரியா |
| கம்போடியா | தேவகிரி |
| பொஸ்டன் | நெதர்லாந்து |
| ஆக்ரா | ரங்கூன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org